Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 314 கார்த்திகை. November. 2022

# வெற்றிமணி


Vettimaniy
ESTD 1950
28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

## நேற்று எப்படி இருந்தோம் என்பதுதான் இன்று எப்படி இருக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது

லண்டன் மாநகரில் ராகவீணாவின் அரங்கப்பிரவேசம்



ஜெர்மனியில்; 'அகம் புறம்' கண்காட்சி

"அப்துல் ஹமீத் வழிப்போக்கன் அல்ல வழிகாட்டி"

● பேராசிரியர் மு.நித்தியானந்தன்




அப்துல் ஹமீத்

கார்த்திகை 27 மாவீரர்களுக்கு எமது அஞ்சலி





சில நேரத்து மௌனங்கள்! ஆயிரம் ஈட்டிகளின் வலியை விட!! வலியானது!!!

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி





# வாடகைத் தாய் இது நயன்தார கதையல்ல!



பிரியா இராமநாதன் (இலங்கை)


ஒரு பெண் தன் கர்ப்பப்பையை இன்னொருவரின் கர்ப்பத்தைத் தாங்குவதற்காக பயன் படுத்தும் முறைமையே சரோகசி எனப்படுகின்றது. சரோகசி என்கிற இந்த சொல் ”surrogatus” என்கிற இலத்தீன் மொழி வார்த்தையிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் ‘ஒருவருக்கு பதிலாக’ அல்லது ‘ஒருவரின் இடத்தில்’ என்பதே. இப்படி இன்னொருவரது கர்ப்பத்தைத் தாங்கும் பெண்ணை “சரோகேட் மதர்” அல்லது வாடகைத் தாய் என்கிறார்கள். மரபியல் மூலமாக வாடகைத் தாய்க்கும் அவர் பெற்றெடுக்கும் குழந்தைக்கும் எந்தவிதத் தொடர்பும் இருப்பதில்லை .

அண்மைக்காலங்களில் இந்திய சினி உலகில் சில நடிகைகள் வாடகை தாய் மூலம் தங்களது குழந்தைகளை பெற்றெடுத்துக் கொண்டபோது, மாறுபட்ட கண்ணோட்டத்தில் இந்த முறைமை பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டாலும், உண்மையில் குழந்தையின்மை என்கிற அவஸ்தையில் வாடும் பல தம்பதியினருக்கு இந்த சரகோஷி முறையானது மிகப்பெரிய வரப்பிரசா தமே .ஐ.வி.எஃப் முறை செய்தும் கர்ப்பம் தரிக்கவியலாத பெண்கள், கர்ப்பப்பை பலகீனமான பெண்கள்,அல்லது கர்ப்பப்பை தொற்று நோய் தாக்குதலுக்கு ஆளாகி கர்ப்பம் தரிக்க முடியாமல் போகும் பெண்கள் போன்ற பலரும் இன்னொரு பெண்ணின் உதவியுடன் தன் குழந்தையை பெற்றெடுக்க விரும்பலாம் அப்படிப்பட்ட பெண்களுக்கான ஓர் சிறந்த தேர்வுமுறையே சரகோஷி .

வாடகைத் தாய் மூலம் பிறக்கும் குழந்தை, ‘Deoxyribo Nucleic Acid’ எனப்படும் டி. ஏன்.எ.பரிசோதனை மூலம் இன்னாரின் குழந்தை என்று நிரூபிக்கப் பட வேண்டும். இல்லாத பட்சத்தில் அந்தக் குழந்தை உருவாகக் காரணமாக இருந்த உயிரியல் பெற்றோர்கள் (biological parents) அக்குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளவேண்டும் என இது தொடர்பான சட்டம் கூறுகின்றது. எது எவ்வாறாயினும், மேலைத்தேய நாடுகளைப் போலல்லாது பழமையில் ஊறிய நாடுகளில் இம்முறை சிறிது தாழ்ந்த கண்ணோட்டத்துடனேயே பார்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.




வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 314



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# தேர்தலுக்கு அஞ்சும் ரணில்?

இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களைப் பின்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சூட்சுபமான உபாயமொன்றை முன்னெடுத்ததையடுத்து எதிர்கட்சிகள் அனைத்துமே உஷாரடைந்திருக்கின்றன. குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடத்தவில்லையென்றால், போராட்டக்களத்தில் இறங்கப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்திருப்பதையடுத்து அரசியல் களம் பரபரப்பாகியிருக்கின்றது. பலப்பரீட்சை ஒன்று உருவாகியிருக்கின்றது.


இன்றைய தருணத்தில் தேர்தல்களை யாரும் வரவேற்கத் தயாராகவில்லை என்பது உண்மை. பிரதான எதிர்க்கட்சிகள் கூட அதற்குத் தயாராகவில்லை. ஆனால், தன்னுடைய நலன்களுக்காக தேர்தலை பின்போடுவதில் ரணில் வெற்றிபெற்றால், எதிரணிகளை அது அரசியல் ரீதியாகப் பாதிக்கும். அதனால்தான் பிரதான எதிர்க்கட்சிகள் இப்போது வரிந்துகட்டிக்கொண்டு போராட்ட களத்தில் இறங்கப்போவதாக எச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டுள்ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எப்போதோ நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஒன்பது மாகாண சபைகளும் இப்போது ஆளநர்களால்தான் நிர்வகிக்கப்படுகின்றது. "நல்லாட்சி" எனப்படும் "மைத்திரி – ரணில் கூட்டாட்சி" இடம்பெற்ற காலத்திலேயே வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உள்ளிட்ட பெரும்பாலான மாகாண சபைகளின் பதவிக்காலங்கள் முடிவுக்கு வந்துவிட்டன.

மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றம் ஒன்றைச் செய்வதற்காக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் ஒன்றை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்தத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகின்றது. இருந்தபோதிலும், பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவது என அனைத்து அரசியல் கட்சிகளும் பின்னர் முடிவுக்கு வந்தன. அதற்கான திருத்தம் மீண்டும் பாராளுமன்றத்தில் செய்யப்படவேண்டும்.

தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கு அரசாங்கம் விரும்பியிருந்தால் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய சட்டத் திருத்தம் ஒன்றின் மூலமாக இதனைச் செய்திருக்கமுடியும். இன்று கூட செய்யமுடியும். ஆனால், அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களைச் சந்திப்பதற்குள்ள தயக்கம் காரணமாக அதனைத் தவிர்க்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட அதனைச்செய்வதற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதுடன் தமது பணியை நிறுத்திக்கொள்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையில் வாகனப் பேரணியை நடந்தும் சுமந்திரன், சாணக்கியன் குழவினர் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் எனக் கோரி இதுவரையில் எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை. இந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்



கான தேர்தல்களை நடத்துவதற்கான அதிகாரம் இப்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கைகளுக்கு வந்திருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட முடியும்.

உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலம் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்ட நிலையில் அதனை மேலும் நீடிக்கமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதுதான் தேர்தல் ஆணைக்குழுவின் திட்டம். அதற்கான அதிகாரமும் ஆணைக் குழுவுக்கு இருக்கின்றது. இந்த நிலையில்தான் ரணில் விக்கிரமசிங்க முந்திக்கொள்ளப்பார்க்கின்றார். தனியொருவனாக வந்து நிறைவேற்று அதிகாரங்களையும் கைப்பற்றிக்கொண்டிருக்கின்ற ரணில், அரசியலில் இரண்டு இலக்குகளுடன் இப்போது காய்நகர்த்துகின்றார். ஒன்று தனது பதவியைப் பயன்படுத்திக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துவது. இரண்டாவது, அதன் மூலமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி அதிகாரத்தைக் கைப்பற்றுவது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களின் மொட்டு அணி தன்னை ஆதரிக்கும் என அவர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

ஆனால், அதற்கு முன்னர் வரக்கூடிய தேர்தல்கள் – குறிப்பாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் தமது பலவீனத்தை பகிரங்கமாக்கிவிடும் என்பதால்,அவற்றைத் தவிர்ப்பதற்கு அவர் நினைக்கின்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாக களமிறங்கும் போது, ஐக்கிய தேசியக் கட்சி காணாமல்போய்விடும் என ரணில் அஞ்சுகிறார். கடந்த பொதுத் தேர்தலிலும் அவரது கட்சிக்கு அதுதான் நடந்தது.

ரணில் ஜனாதிபதியாக வந்தபோது நாட்டின் பொருளாதார நெருக்கடியை அவர் முடிவுக்குக்கொண்டுவருவார் என்ற நம்பிக்கை இருந்ததுது. ஆனால், நெருக்கடியை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அவர் எதிர்பார்த்த இடங்களிலிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் இன்றுவரை திருப்திகரமான பிரதிபலிப்பு கிடைக்கவில்லை. ஜப்பானில் ஒரு மாநாட்டை நடத்தும் திட்டமும் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில்தான் இலங்கையை வருமானம் குறைந்த நாடாகப் பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை அமைச்சரவை இப்போது எடுத்துள்ளது.

இதன் மூலமாகவும் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. ஆனால், வரிகள் அதிகரித்துள்ளன. புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விலைவாசியை மக்களுக்கு எட்டாத உயரத்துக்கு கொண்டுசெல்வதற்கு

25 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## யேர்மனியில் பசுமை இல்லம் நடத்திய முக்காலம் நிகழ்ச்சியில்

# ஈழத்துக் கலைஞர்களுடன் திரைப்படப் பாடகர் உண்ணிக்கிருஷ்ணன்



யேர்மனியில் வுப்பெற்றால் நகரில் கடந்த 15.10.2022 பசுமையை வளர்ப்போம் வறுமையை ஒழிப்போம் எனும் தாரக மந்திரத்துடன் பசுமை இல்லம் நடத்திய முக்காலம் கலைநிகழ்ச்சி மிகச் சிறப்பாக இடம்பெற்றது. ஈழத்துக் கலைஞர்களுடன், தென்னிந்திய திரைப்பட பாடகர் பி.உண்ணிகிருஷ்ணன் கலந்து பாடிச் சிறப்பித்தார்.பசுமை இல்லத்திற்கு மக்கள் நல் ஆதரவளித்தனர். வெற்றிமணியும் வாழ்த்தி மகிழ்கின்றது.



## ஏகாம்பரம். இராசநாயகம் அவர்களின் மறைவிற்கு

# வெற்றிமணியின் இதய அஞ்சலி

தோற்றம்: 25.04.1930 | மறைவு: 04.10.2022



உடுவில் கிராமத்தைபிறப்பிடமாகவும் கொழும்பு Francis Road Bam balapitiya ஐ வதிவிடமாகவும் கொண்டு borella MRI இரத்த பரிசோதனை நிலையத்தில் உயர் பதவி வகித்தவரும், இறுதிக்காலத்தில் 25 வருடங்களுக்கு மேல் இங்கிலாந்தில் வசித்தவர். இன்று 04.10.2022 லண்டனில் காலமானார். இவர் முன்னாள் ஆசிரியை திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், (கனடா) சுரேந்திரன், (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வினோ,கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், நியோமியின் (கனடா) அன்பு பேரனும் (தாத்தா) ஆவர்.

எனது தந்தையார் நாவலப்பிட்டி யில் ஆசிரியராக இருந்த காலத்தில், எமது இல்லத்தில் அதிகம் சந்திக்கும் அன்பு மாமாவாக இருந்தார். எனது அன்னை, தந்தையரை இன்று வரை நினைவில் வைத்து போற்றுபவர்கள். நன்றி மறவாத அன்பு உள்ளத்திற்கு சொந்தக்காரர். ராசு மாமா என அன்பாக நாம் அழைப்போம். மலையகத்தில் வாழ்ந்த காலத்தில் எனது தந்தை வெற்றிமணி 1950 ஆண்டு ஆரம்பித்த வேளை அருகில் இருந்த உறவினர்களில் இவரும் ஒருவர். ஒவ்வொரு சரித்திர நிகழ்வுகளுக்கும், அருகில் இருந்தவர்கள் மறையும் போது,சரித்திரங்களின் சாட்சிகள், நலிவடைவதாக கருத வேண்டி அமைந்துவிடுகிறது. அவரது இழப்பு வெற்றிமணி யின் சரித்திரத்தில் பத்திரமாக இருந்த ஒரு ஆவணத்தின் இழப்புக்கு ஈடாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

**சிவகுமாரன் (கண்ணன்)**
**வெற்றிமணி ஆசிரியர்**

## யேர்மனியில் குமெர்ஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் கலைமாமணி உண்ணிகிருஷ்ணன்

Tamil.de - Olyyn Thanapalasingham) இணையத்தள ஆதரவில், அருள் மிகு குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு கருநாடக இசைப் பாடகரும் தேசிய விருதுபெற்ற திரைப்படப் பின்னணிப் பாடகரும் ஆவருமான பி.உண்ணி கிருஷ்ணன அவர்கள் 14.10.2022 அன்று வருகை தந்து முருகனை வணங்கினார்.

அவருக்கு ஆலய நிர்வாக சபையினர்கள் பொன்னாடை போர்த்தி. மாலையும் அணிவித்து கௌரவப்படுத்தினார்கள்.

நன்றி: உலகக்கோவில்






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இன்னாருக்கு இன்னார் என்று



மகனையோ மகளையோ மேற்படிப்புக்காக பல்கலைக்கழகம் அனுப்பி வைக்கும் பெற்றோர், தமது பிள்ளை தனியாக வருமோ ஜோடியாக வருமோ என்று அஞ்சி அஞ்சி வாழ்கிறார்கள். இப்போது மகளோடு ஜோடியாக வரப்போவது வெள்ளை இனத்தவனோ? காப்பிலியோ? சீனனோ? என்றும் புதிய அச்சங்கள். இதற்கு காரணம் இங்கு இலண்டனில் கலப்பு இனத் திருமணங்களின் அதிகரிப்பு.

“சரி ராசாத்தி! உவங்கள் எல்லாம் உனக்கு வேண்டாம். நீ எங்கட சிலோன் பெடியன் ஒருத்தனையே பார்“ என்று மகளிடம் சொன்னால், “அம்மா என்னோட படிக்கிற Boys உடன் நான் ஒரேமாதிரி தான் பழகிறன். இவனை என் Parents ஏற்றுக் கொள்ளுவினமா என்ற கண்ணோட்டத்திலை நான் பழகிறதே இல்லையம்மா! உங்கட Sri Lankaவில Closed Societyயிலை வாழ்ந்த உங்களுக்கு இந்த விபரங்கள் விளங்குகிறது கஷ்டம் அம்மா!“ என்று ஒரு குட்டி Lecture அடித்துவிட்டு தன் Mobile உடன் தன் Room க்குள் போய் மறைந்து கொண்டாள் செல்வப் புதல்வி சினேகா.

சினேகாவுடன் கேம்பிரிட்ஜ் யூனியில் படிக்கும் சக மாணவியரை சினேகாவின் பெற்றோர் அறிந்திருக்கிறார்கள். சினேகாவுக்கு மிக நெருக்கமானவள் ஷாலினி. “Shalini is my Bosom Pal“ என்று நகைச்சுவையாக உரத்து அடிக்கடி பிரகடனம் செய்வதில் சினேகாவுக்கு ஒரு மகிழ்ச்சி. இப்படி குதூகலமாக பேசி மகிழ்ந்திருந்த இரு தோழியரும் Boys பற்றி பேசும்போது சற்று அடக்கி வாசித்தார்கள். விசாரித்ததில், மாணவர்களில் மிகமிக கெட்டிக்காரனான விகாஷ் (சக மாணவர்களினால் Professor என குறிப்பிடப்படும் Vikash) தமிழ் மாணவியர்கள் பக்கம் தன் கவனத்தை திருப்பினானாம். படிப்பு படிப்பு என்று இருந்த விகாஷ் இப்போது ஷாலினியின் பக்கம் கவனம் செலுத்த ஆரம்பித்ததை அந்த Batch மாணவ மாணவியர் அனைவருமே கவனித்தார்களாம்.

படிப்பில் சூரப்புலி, பிரமச்சரியத்தில் பிள்ளையார் என்று பெயரெடுத்திருந்த விகாஷ் தன் Bosom Pal ஷாலினியை விரும்புகிறான் என்று தெரிய வந்ததும் ஷாலினியை விட மனம் குதூகலிப்பு அடைந்தது சினேகாதான்! காதல் ஜோடிகள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தை சுற்றியிருந்த பூங்காக்களை சுற்றி வந்தார்கள். படிப்பு முடிந்ததும் பெற்றோருடன் பேசி திருமணம் என்றும் தீர்மானித்தார்கள். ராமாயண மகா காவியத்தில் கடலைத் தாண்டி அணைகட்ட குட்டி வானரங்களும் அணில்களும் உதவின என்பது போல விகாஷ் ஷாலினி காதல் மகா காவியத்தில் சினேகா என்ற குட்டி அணிலும் பல உதவிகளை செய்து மகிழ்ச்சி அடைந்தது. கல்லூரி Professor மாரிடம் பொய் சொல்வது, ஷாலினியின் பெற்றோரிடம் நொண்டிக் காரணம் சொல்வது – இதெல்லாம் தோழி ஷாலினியின் காதலுக்கு Bosom Pal சினேகா காட்டிய மரியாதை!

காதலையும் கர்ப்பத்தையும் எங்கள் தமிழ் குடும்பங்களிடமிருந்து மறைப்பது மிகக் கடினம். ஷாலினி – விகாஷ் காதல் ஷாலினியின் யாழ்ப்பாண பழமைவாத பெற்றோரின் காதுகளையும் எட்டியது. தமது மகள் ஒரு வேற்று இனத்தவனை, வேற்று நிறத்தவனை, கறுப்பு (காப்பிலி) மஞ்சள் (சீன) அல்லது பிரிட்டிஷ் வெள்ளை இனத்தவனாக இருந்தால் ஆதிமூலம், அடிமுடி விசாரிக்கத் தேவையில்லை என்று விட்டிருக்கலாம். ஆனால் ஷாலினியுடன் மினக்கெடும் பெடியன் தமிழ்ப் பெடியனா? கேம்பிரிட்ஜில் படிப்பில் விண்ணன்! ஆனால் ஊரிலை எவடம்? யார் பகுதி? என்று அறிய முற்பட்டார்கள். விசாரணைகளில் கிடைத்த விபரங்கள் அவர்களுக்கு அதிர்ச்சியளித்தன. அம்மாவுக்கு ஒரே பிள்ளை விகாஷ். செல்வம் கொட்டிக் கிடந்தது. கலைமகளும் திருமகளும் போட்டி போட்டுக் கொண்டு விகாஷ் குடும்பத்திற்கு அருள்பாலித்தார்கள்.



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

ஆனால் பாவம் விகாஷ். போயும் போயும் ஒரு யாழ்ப்பாண பழமைவாதிகள் குடும்பத்து புதல்வியை, ஜாதிபேதம் பேசும் மேட்டுக்குடி யாழ். பெண்ணை விரும்பியிருக்கக்கூடாது. விகாஷின் பெற்றோரின் தொழில், குடும்பப் பின்னணி தெரிந்ததும் ஷாலினியின் பெற்றோர் வீண் விவாதங்களில் ஈடுபட விரும்பவில்லை.

ஷாலினியின் தாயார் சுமதி அமெரிக்காவுக்கு ஒரு WhatsApp Call போட்டு தன் அண்ணாவின் மகன் அருணுடன் பேசினாள். “அருண்! நீ உடனே புறப்பட்டு London க்கு வர முடியுமா?“. “என்ன யுரவெல? உங்களுக்கு ஏதும் Problem மா?“ என்று கேட்டான் அருண். அருணுக்கு London மாமி என்றால் உயிர். அவனது பெற்றோர் 1984க்கு பிறகு கொழும்பைவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியபின் அருண் மாமியுடன் கொழும்பிலேயே தங்கினான். அவர்களோடு 1995 அளவில் மாமியின் குடும்பத்தில் ஒருவனாக London வந்து அமெரிக்காவுக்கு பயணமானான்.

தன் புதல்வி ஷாலினி ஒரு யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட இனத்து பெடியனோடு திரிவதை அறிந்து தன் மருமகனை Texasலிருந்து வரவழைக்க முடிவு செய்தாள். அருணை மணமுடிக்க ஷாலினிக்கு சம்மதமா? – ஷாலினியை மணமுடிக்க அருணுக்கு சம்மதமா? என்றெல்லாம் மாமி கேட்கவேயில்லை. அவளின் போக்கே ஒரு Bulldozer யந்திரம் போல எதிரில் எது வந்தாலும் உருட்டி நசுக்கிவிடுவாள்! திருமணப் பதிவு நடந்தது. இலண்டன் ஆர்ச்வே உயர்வாசற்குன்று முருகன் சன்னிதியில் ஷாலினியின் கழுத்தில் அமெரிக்க மாப்பிள்ளை அருண் தாலி கட்டினான். அமெரிக்காவில் Green card வைத்திருந்த அவனும் மனைவியை கூடவே அழைத்துச் செல்வதில் சிரமம் இருக்கவில்லை.

இதெல்லாம் நடந்தது Uniஇன் Vacation காலத்தில், சினேகாவுக்கு இதெல்லாம் கனவாக நடந்ததுபோல இருந்தது. Vacation

28 ஆம் பக்கம் பார்க்க...



# Lucky Fly Reisebüro


Luckyfly

## VIP Service

தாயக பயணத்தில்
Lucky fly வழங்கும்
Vip சேவைகள்!

**Frankfurt - colombo | Ab: €789**

HOTEL TRNSPORT+ ONE DAY HOTEL WITH ONE MEAL+ TRANSPORT TO VAVUNIA, JAFFNA.



**கொழும்பு விமான நிலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் €49 மட்டுமே!**

COLOMBO AIR PORT -
FORT STATION -
YALDEVI
யாழ். தேவி
(FIRST CLASS TICKETS)

## Qatar Airways/ Düsseldorf

NOVEMBER மாதம் முதல் Düsseldorf இல் இருந்து Qatar Airways இல் கொழும்பு பயணிக்க எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

BOOK ON
+49234 23 99 032
+49179 14 84 892

QATAR AIRWAYS القطرية

OPENING TIME
MONDAY- FRIDAY: 9.30 AM- 6.30 PM
SATURDAY : 10.00 AM- 3.00 PM

e.mail: info@L-Fly.de | www.L-fly.de



கொழும்பு விமான நிலையத்தில் இருந்து
கொழும்பு கோட்டை புகையிரத
நிலையத்திற்கு அழைத்துச் சென்று
யாழ்தேவியில் முதல்தர பயணிகள்
சீட்டில் ஏற்றிவிடும் வரை
எமது சேவை அமையும்.

யாழ்.,தேவி பயணச்சீட்டுக்களை நாம் இங்கேயே பதிவுசெய்து தருகிறோம்.

SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | طيران الخليج Gulf Air

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany




# நேற்று எப்படி இருந்தோம் என்பதுதான் நாம் இன்று எப்படி இருக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது

கொரானோ பிரச்சனையை புடின் முடித்து வைத்தார். பொன்னியின் செல்வன் (ராஜராஜ சோழன்) பிரச்சனையை நயன்தாரா முடித்து வைத்திருக்கிறார். பிக் பாஸ் மிச்சமுள்ள எல்லா பிரச்சனைகளையும் இன்னும் மூன்று மாதத்தில் முடித்து வைத்துவிடுவார்.

நேற்றைய கொரோனாவே என்ன வென்று தெரியாத ஒரு தலைமுறை சில மாதங்களில் உருவாகிவிடும். இரண்டாம் அலை, மூன்றாம் அலை, பிணங்கள் மித

ந்தது, மணியடித்தது, விளக்கு பிடித்தது என்றெல்லாம் எதுவுமே இந்தியாவின் வரலாற்றில் நடக்கவில்லை, வரலாற்றை எவனோ மாற்றி எழுதியிருக்கிறான் என்றெல்லாம் நம்மை நம்பவைத்துவிடலாம். பரபரப்பான நிகழ்வுகள் எவ்வளவு பரபரப்பைக் கிளப்பினாலும் அச்சென்று தும்மிவிட்டு கடவுளே ரட்சியும் என்று அடுத்த வேலையைப் பார்க்கச் செல்லும் அளவில்தான் அவற்றின் ஆயுட்காலத்தை வைத்திருக் கிறோம்.

நேற்று எப்படி இருந்தோம் என்பதுதான் நாம் இன்று எப்படி இருக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது. இன்று தலைவலித் தால் நேற்று பார்ட்டி பயங்க ரமாக இருந்திருக்கும். நேற்று எப்படி இருந்தோம் என்பதை மறந்து கோமாவிலிருந்து எழுவது போல தினமும் காலையில்

அருள் மெர்வின்
(சுவிஸ்)

உள்ளங்கையைப் பார்த்து எழுந்து கொண்டிருந்தால், 'நேற்று நீ இப்படி தான் இருந்தாய்' என்று அவர்களது கதையைதினமும்நம்கதையாகபோதனை செய்து நம்மை நம்ப வைக்க ஏதோ ஒரு கூட்டம் ரெடியாக இருக்கும். அவர்கள் சொன்ன கதையை நம் வரலாறு, நம் நாடு, நம் மதம், நம் கலாச்சாரம், நம் வாழ்க்கைமுறை என்று நம்பிக் கொண்டிருப்பதில் நமக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது. மேட்ரிக்ஸ் படம் போல இன்னொருவர் நம் உலகத்தை உருவாக்க அவரது உலகத்துக்குள், அதிலிருக்கும் சுக துக்கங்களுக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கலாம். இதிலிருந்து விழித்தால் இது அநியா யம் என்று முதலில் கோபம் வரும். பிறகு மாற்றமும் வரும்(ரலாம்). எப்படி விழிப்பது? நேற்று நடந்தைவைகளை நம் கண்முன்னே சிசிடிவியில் படம் பிடித்தது போல ஆதாரங்களுடன் யாராவது காண்பித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படிக் காட்டி நம்மை விழிப்பாக வைத்துக் கொண்டிருக்க வைப்பதில் அருங்காட்சியகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.







அகம் புறம் கண்காட்சி

ஜெர்மனியின் 'அகம் புறம்' என்று தமிழில் எழுதப்பட்ட மணிக்கொடி பட்டொளி வீசி லின்டன் அருங்காட்சியகத்துக்கு வெளியே பறக்கிறது.

ஜெர்மனியின் லின்டன் அருங்காட்சியகத்தில் தமிழர் வரலாறு மற்றும் கலாச்சாரம் சம்பந்தப்பட்ட பொருட்கள் உலகத்தின் பல இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு 'அகம் புறம்' என்று தலைப்பிட்டிருக்கிறார்கள். 'அகம் புறம்' என்று தமிழில் எழுதப்பட்ட மணிக்கொடி பட்டொளி வீசி அருங்காட்சியகத்துக்கு வெளியே பறக்கிறது. மெர்சிடிஸ்-பென்ஸ், போர்ஷே போன்ற மாபெரும் கார் நிறுவனங்களின் தலைமையகமான ஸ்டுட்கார்ட் நகரின் மத்திய ரயில்வே நிலையம் முதல் பல முக்கிய இடங்களை அலங்கரிக்கின்றன 'அகம் புறம்' என்று எழுதப்பட்ட ஆளுயர போஸ்டர்கள். இந்தியாவின் தலைநகரில் கூட இப்படி தமிழைப் பார்த்ததில்லை. தமிழ்க்கண்காட்சி என்றால் உடனே இந்தியத் திருநாட்டின் ஒன்றிய எல்லைக்குள் வாழும் தமிழர்கள் பற்றி (மட்டும்) என்று நினைத்து விட வேண்டாம்.




தமிழர்கள் அனைவருக்குமானது. அதில் ஆதிச்சநல்லூரும் உண்டு, ஈழமும் உண்டு, எண்பது சொச்சம் நாடுகளும் உண்டு. தமிழர்கள் வாழ்ந்து வரும் நிலப்பரப்புகளின் ஓர் அழகான வரைபடத்திலிருந்து கண்காட்சி ஆரம்பிக்கிறது. அடுத்து அரிக்கமேடு மற்றும் ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பொருட்கள், சங்க காலம், ஓலைச்சுவடி, ஔவையார் சிலை, திருவள்ளுவர் சிலை என்று ஒரு ஆழமான அடித்தளம் போடப்படுகிறது. திரும்பிப் பார்த்தால் திருக்குறட்பாக்கள், பழந்தமிழ் இலக்கிய வரிகள், திணைகள், துறைகள் என்று டிஜிட்டல் மீடியா துணையுடன் கூரையிலும் தரையிலும் சுவர்களிலும் அமைக்கப்பட்ட திரைகள், ஒலி ஒளிக்காட்சிகள் மூலம் நம்மை ஒரு 'தமிழ் நாட்டிற்குள்' இழுத்துச் செல்கிறார்கள். அடுத்தடுத்து அழகியலுடன் திட்டமிட்டு அமைக்கப்பட்ட அறைகள். சமண, பௌத்த காலம், பக்தி காலம்,

08 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஜெர்மனியில் தமிழர் பெருமித கண்காட்சி

## தொடங்கி வைத்த அமைச்சர் தங்கம் தென்னரசு! முதல்வர் வாழ்த்து!






ஸ்டுட்கார்ட் : ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் லிண்டன் அருங்காட்சியகத்தில் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட அகழாய்வுப் பொருட்களின் கண்காட்சியை தமிழக தொழில்துறை, மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.இந்த கண்காட்சி-க்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு மற்றும் ஜெர்மனி தமிழ் அமைப்புக்கள் முன்முயற்சியில் அகம் புறம் என்ற 6 மாத கால கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழா நிகழ்ச்சி கடந்த 7-ந் தேதி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது வாழ்த்து செய்தியை அனுப்பி இருந்தார். இந்த வாழ்த்துச் செய்தியை தமிழக அரசின் சுற்றுலாத் துறை செயலர் டாக்டர் சந்திரமோகன் வாசித்தார்.

# ஸ்டட்டுட்கார்ட் லிண்டன் அருங்காட்சியகம் மற்றும் சென்னை அருங்காட்சியகம் இரண்டிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஸ்ட்டுட்கார்ட் லிண்டன் அருங்காட்சியகம் மற்றும் சென்னை அருங்காட்சியகம் இரண்டிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான சந்திப்பு கூட்டம் ஸ்ட்டுட்கார்ட் லிண்டன் அருங்காட்சியகத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் இரண்டு அருங்காட்சியகங்களுக்கு இடையே ஆக்கபூர்வமான செயல்பாடுகள் எவ்வகையில் அமையலாம் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டது. இதன் அடிப்படையில் இரண்டு அருங்காட்சியங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜெர்மனி லண்டன் அருங்காட்சியகத்தின் இயக்குனர் டாக்டர் டி காஸ்ட்ரோ, தமிழ்நாடு அரசின் சுற்றுலா பண்பாடு அருங்காட்சியங்கள் மற்றும் அறநிலையங்கள் துறை செயலர் டாக்டர் சந்திரமோகன் ஐஏஎஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.



தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலையில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சுபாஷினி ஒருங்கிணைப்பில் இச்சந்திப்பு கூட்ட நிகழ்வு நடைபெற்றது. விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைச் செயலாளர் கௌதம சன்னா, தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் உறுப்பினர்கள் இந்தச் சந்திப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜெர்மனி மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு நாடுகளுக்கு இடையே வரலாறு மற்றும் ஆய்வுகள் தொடர்பான முயற்சிகளை ஆக்கபூர்வமான வகையில் முன்னெடுக்கும் எண்ணத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகளில் பாடன் ஊர்ட்டெம்பெர்க் மாநில அமைச்சர் பெட்ரா ஓல்ஷோவ்ஸ்கி, ஜெர்மனிக்கான இந்திய தூதர் எஸ்.ஈ. ஹரிஷ் பர்வதனெனி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த கண்காட்சியில் தமிழகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள், ஐரோப்பிய தமிழறிஞர்களின் தமிழ் கொடைகள் காட்சி படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு உள்ளிட்ட இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

08 ஆம் பக்கம் பார்க்க...

## நேற்று எப்படி இருந்தோம் என்பதுதான் ...

சுதந்திரப் போராட்ட காலம், திராவிட எழுச்சி, ஈழப் போராட்டம், சினிமா தமிழ் என்று கண்காட்சி விரிந்து நம் பெற்றோர் காலம், நம் காலம், தேங்காய்த் துருவி, கேஸ் சிலின்டர் என்று ஒரு மிக நீண்ட காலவெளிக்கான தமிழர்களின் உலகத்தை அந்தந்த காலத்தைச் சார்ந்த பொருட்களின் உதவியுடன் மெய்சிலிர்க்க வைத்து நினைவூட்டுகிறார்கள்.

நம்மை நாமே செல்பி எடுத்து இன்ஸ்டாகிராமில் போட்டு நாமே லைக் போடுவது ஒரு வகையான பெருமை. நம்மை இன்னொருவர் போட்டோ எடுத்து அதற்கு மக்களெல்லாம் லைக் போடுவது இன்னொரு வகையான பெருமை. இந்தக் கண்காட்சி இரண்டாவது வகை. தமிழர்கள், ஐரோப்பியர்கள், உலக அருங்காட்சியகங்கள், அரசாங்கங்கள் என்று பலபேர் இந்தக் கண்காட்சிக்குப் பின்னால் தங்கள் உழைப்பையும், ஆராய்ச்சிகளையும், பொருட்களையும் வழங்கியிருக்கிறார்கள். இந்த அருங்காட்சியை உலகெங்கும் எடுத்துச் செல்லும் பணியைத் தமிழ் மரபு அறக்கட்டளை (THF) சிறப்பாகச் செய்து வருகிறது. இல்லாவிட்டால் மேட்ரிக்ஸ் உலகத்தில் கோமாவில் இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு இப்படி ஒரு விஷயமே தெரிந்திருக்காது. ‘வாழ்க வளமுடன்‘ என்று யாராவது வாழ்த்தும் போது எது வாழ்க்கை, எது வளம் என்று கேள்வி கேட்டு யோசிக்க ஆரம்பித்தால் அந்த வரியை வைத்துக் கொண்டு பிஎச்.டி. செய்ய வேண்டும். தமிழர்களுக்கு அந்தக் கேள்வி அவசியமில்லை. ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்‘ என்று பாவேந்தர் முழங்கியது ஆழமான விஷயம். வாழ்க வளமுடன் என்பதற்குப் பதிலாகத் தமிழை வாழ வைத்தாலே போதுமானது. வாழ்வும் வளமும் தமிழுடன் வந்து சேரும். (முதல் பத்தியில் பிக்பாஸில் ஆரம்பித்தேன். பிக்பாஸ் பார்த்துக் கொண்டிருந்தால் அதில் கமலஹாசன் வரலாறு பற்றி சொல்லிய விஷயத்தைச் சிந்தியுங்கள்.)





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



## லண்டன் மாநகரில்

# ராகவீணாவின் அரங்கப்பிரவேசம்

முப்பது மாத வேள்வியின் பின் முழுநிலவென அரங்கேறிய ராகவீணாவின் ஆடலைக் கண்டு மகிழ்ந்து நெகிழ்ந்தவளாய் என் அனுபவப் பகிர்வை எழுதவும் விளைகிறேன்.லண்டன் மாநகரில் நடைபெற்ற முக்கிய அரங்கேற்றமாக பலரது ஏகோபித்த பாராட்டைப் பெற்றமைக்கு பல காரணங்கள் இருப்பினும் ஒருசிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்

**1) பெற்றோர்**

பிறந்து மொழி பயின்ற பின்னெலாம் காதல் என்பது போல் பிஞ்சுப் பாதம் மண் கொஞ்சிய போது முதல் ராகவீணாவை நாட்டியத்தோடு பயணிக்கச் செய்த பெற்றோரைப் பெற்றது பெரு வரம். சென்னை பரதகலாஞ்சலியில் அரங்கேற்றம் கண்டு , பரதநாட்டியத்தில் இளமானிப் பட்டமும் பெற்றுள்ள தாயார் நிறைஞ்சனா இன்று வரை கடந்த நான்கு தசாப்தங்களாக நாட்டியத்தைக் கற்றுக் கொண்டு இருக்குமளவு கலைமீது அளப்பரிய ஆர்வமும் அர்ப்பணிப்பும் கொண்டுள்ளார். தன் மகளே உயிரென எண்ணி ஆவன செய்து அன்பும் அக்கறையும் சுதந்திரம் வழிகாட்டலும் தரும் நிறை தந்தை சுரேஸ்குமார்.

இவ்விருவரினதும் ஆத்ம தாகத்தின் விளைவால் ராகவீணாவை நற்குருவிடம் ஒப்படைந்தனர்.

பெற்றோராய் பெருங் கடன் ஆற்றினர்.

**2) குரு**

மீனாட்சி ரவி, குரு V.P தனஞ்சயன் ஐயா, சாந்தா தனஞ்சயன் அம்மாவின் புகழ் பூத்த பரத கலாஞ்சலியின் சிரேஷ்ட மாணவர்களான,ஸ்ரீமதி,ஸ்ரீலதா வினோத், ஸ்ரீமதி புஷ்கலா கோபால் ,ஸ்ரீமதி ஷாலினி சிவசங்கர் போன்றோரிடம் சீராக நடனம் பயின்று, தேடலும், நேர்த்தியும், பண்பும் உள்ள ஆசிரியராக லண்டனில் பௌர்ணமி ஆட்ஸ் அக்கடமியில் நாட்டியம் கற்றுத் தருகிறார். தனது முதல் அரங்கேற்றமாக இருந்தாலும் தான் கற்றுக் கொண்டதைத் தவிர புதிய விடயங்களை உள்வாங்கும் துணிவும், தெளிவும், பரந்த மனமும் இருப்பதால் மார்க்க உருப்படிகளைச் சீராக அமைக்கும் முதற்கட்ட செயற்பாட்டிற்காய் என்னை இணைத்துக் கொண்டனர். அன்றிலிருந்து அரங்கேறும் வரை உடன் பயணிக்கும் வாய்ப்பும் கிட்டயதில் மகிழ்வே.

**3) மார்க்க உருப்படிகள்**

தமது குரு பாரம்பரியத்தை டிஜிட்டல் உலகக் குழந்தைக்கும் வழங்க வேண்டும் எனத் திண்ணம் கொண்டு பரதகலாஞ்சலி உருப்படிகளாக முதல் உருப்படி ( நடன பூஜை), சப்தம் (தண்டை முழங்க), நிறைவு உருப்படி ( பேஹக் தில்லானா ) மூன்றும் சேர்க்கப்பட்டிருந்தது. மிகுதி உருப்படிகளுக்கு என் பணி ஆரம்பமானது.

“பஞ்சமம் “வர்ஜ்ஜமாக உள்ள ராகங்களின் மீது ஏற்பட்ட திடீர் காதலால்,



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

ஹம்சவிநோதினி ராகத் தில் ஜதீஸ்வரம் அமைத்துத் தருமாறு அந்த இசைமேதையிடம் அன்புடன் அணுகினேன்.

தியாகராஜ சிஷ்ஷப் பரம்பரையில் ஐந்தாம் தலை முறை கலைஞராக, சாகி த்ய இசை வழங்கியதுடன், பல்வேறு தில்லானாக்களையும்,ஆடல் உருப்படிகளையும், நாட்டிய உலகிற்கு தந்த லால்குடி இசை பாணியில், ராகவீணாவிற்காக அமைத்துத் தந்திரு ந்தார் சங்கீத கலாநிதி லால்குடி புதுசு கிருஷ்ணன் ஐயா.

முப்பெரும் தேவிகள் மீது வர்ணம் அமைய வேண்டும் என ஆசிரியை மீனாட்சி சிட்டைப்படுத்தித் தர, இயலாளமும், இசைவளமும், நாட்டிய உணர்வும் கொண்டமையும் உருப்படிகளைத் தந்து நாட்டிய இசைக்கு புது வடிவம் வழங்கிக் கொண்டிருக்கும் மகாகவி சுப்பிரமணிய பார தியின் கொள்ளுப் பெயரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி ஐயாவை அணுகினோம்.

ஐயாவின் இசைச்செறிவு இவ்வர்ணத்திலும் கதி பேத ஜதிகளாலும், மிக நுண்ணிய கமக பிரயோகங்களாலும், ஸ்வராக்ஷ்ர சிறப்புக்களாலும் ஸ்வர சேர்க்கைகளாலும், குறிப்பாக மூன்று ஸ்தாயிகளையும் தொட்டு வரும் பேரழகாலும் வியப்பூட்டியது.



அதே போல யாழ்ப்பாணம் வீரமணி ஐயாவின் கல்யாண வசந்த மண்டபத்தில் பதத்தினை, நாட்டிய அமைப்பிற்கு ஏற்ப சுவைகூட்டி ரசமேற்றி ராஜ்குமார் பாரதி ஐயா வழங்கினார். ஆயிரம் யானைகள் புடை சூழ, இந்திரன் முதல் வானவர் யாவரும் வரவேற்க, தோரணம் நாட்டி, பூரண பொற் குடம் வைத்து,மத்தளம் கொட்ட,வரிசங்கம் நின்றூத, சதிரிள மங்கையர் எதிர் கொண்டு நடமாட, நாராயணன் நம்மை வந்து ஆண்டு, செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி, அம்மி மிதித்து தீவலம் செய்யக் கனாக் கண்ட கோதை நாச்சியார் போல, பொன்னாலைப் பதி வாழும் வரத ராஜனை எண்ணி நினைந்துருகும் நாயகியாக இப்பதத்தின் அபிநயத்தினை அமைக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

அபிநயஷேத்ராவின் மார்க்க உருப்படிகளில் அநேகரால் பாராட்டப்பட்ட “புதிய ஆத்திசூடி அலாரிப்பு”ராகவீணாவின் மார்க்கத்திலும் சேர்க்கப்பட்டு அபிநயஷேத்ராவையும் பாரதியையும் மகிழ்வித்தனர்.ராமனை பஜித்தால் கிருதியை ராகவீணாவிற்கு ஏற்றவிதத்தில் நெறியாள்கை செய்திருந்தார் ஆசிரியை மீனாட்சி. ஆக இம் மகான்களின் உருப்படிகளிற்கு நடனமாடியது பெரும் பயனும் சிறப்பும்.

**4. பேராதரவு**

ராகவீணாவின் அரகேற்றத்தை மகா கோவிலாக மாற்றிட 4 தூண்களாக ஒரு புறம் அனுபவமிக்க குயிலுவக் கலைஞர்கள், மறு புறம் மஹான்களின் ஆசிகள், உருப்படிகள், மற்றொரு புறம் பெற்றோரும், குருவும் அவர்தம் குடும்பமும் நான்காவதாக மண்டபம் நிறைந்த மூத்த நடன ஆசிரியர்கள், கலைஞர்கள், ரசிகர்கள், நண்பர்கள்.

இவற்றை விட இங்கிலாந்திற்கான இலங்கை உயிர்ஸ்தானிகர் கௌரவ சரோஜா சிறிசேன அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.ஆங்கே என்னையும் இவ்வரங்கேற்றம் காண கௌரவ அதிதியாக அழைத்தமைக்கு பேரன்பும் நன்றிகளும்.ஆஹா, இத்தனையும் வரமாய் அமைய இந்நாட்டிய அரங்கேற்றம் வாழ் நாள் முழுவதும் இனிமை சேர்க்கும் என்பது திண்ணம்.என் குருநாதர் பத்மபூஷன் C.V சந்திரசேகர் ஐயாவின் பரிபூரண ஆசிகளும், எம்பெருமான் தில்லை கூத்தனின் அருளும் என்றும் ராகவீணாவிற்கு நிலைக்க வேண்டும் என்று பிரார்த்தித்தித்து வாழ்த்துகிறேன்.எல்லா உயிர்களும் இன்பம் எய்துக !





# யேர்மனியில் படைப்பாளர் நூல் வெளியீட்டு விழா








படைப்பாளர் நூலின் முதல் பிரதிகளை திரு. கண்ணையா ஜெயகரன், திருமதி விஜிதா ஜெயகரன் (டோற்மூண்ட்– Imbiss உரிமையாளர்கள்) பெற்றுக்கொண்டனர். அருகே நூல் தொகுப்பாசிரியர்கள் திரு.சு.பாக்கியநாதன் மற்றும் திரு.சி.ராஜகருணா.

“எழுத்தின் வேரே மொழியின் உயிர்ப்பு காலத்தின் பதிவே வரலாற்றுச் சிறப்பு““ என்னும் தூரநோக்குச்சிந்தையும் புலம்பெயர் வாழ்விடத் தேட்டமும் துலங்கும்தூரிகைகளே எழுத்தாளப் பெருந்தகைகள்

காலத்தின் வலிமைகருக்கொள்ள, புலத்தின் பொக்கிசமாக ஜேர்மனி டோட்மூன்ட் நகரில் 24,09,22 இருபெரும் கலைஞர்கள்,பலநூல்கள்,ஆலயப்பதிவுகளை சம்பவத்திரட்டாக காப்பரண் செய்யும் இரு படைப்பாளர்கள் இணைந்து 83 எழுத்தாளர்களின் சுயவிபரத்திரட்டினை சேகரித்து ““படைப்பாளர்கள்““ என்னும் அரிய நூலினை வெளியீடு செய்து வைத்தார்கள்.

பல அறிஞர்கள்,கலைஞர்கள்,எழுத்தாளர்கள் சங்கமித்த அரங்காகவும், இலக்கியத்தாகம் நிறைந்த மொழிப்புலமை பிரவாகிக்க வெளியீட்டு அரங்கம் வியாபித்திருந்தமை வெற்றிவெளியீட்டிற்குச் சான்றுரைத்தது. பல அறிஞர்கள், இலக்கிய வாதிகளின் தொகுப்புரைகள், விமர்சனங்கள்,வாழ்த்துரைகள் ஜேர்மனிய நாட்டில் கல்விகற்று பலதொழில்களில் புலமைபெற்ற இளைய சமூகத்தினர் உரையாற்றியமை இன்னொரு இணைவுப்பாலத்தை வலுவாக்கியது. “படைப்பாளர்“ நூலனாது கருத்தரித்து 30 திங்களிலே தனது பிரசவத்தை முழுமையாக்கிய பாரிய பணியைக் கொண்டது.

நூலின் முகப்பு அட்டைப்படம் கணனி தொழில்நுட்பவியாலாளர் கருக்கொள் சிந்தையின் செறிவை எம்முன் விரவிநிறைக்கிறது. ஆதிமனிதர் எழுத்தாணி, நூல்த்தேட்டம், புலத்தில் பதிவானது என்னும் அத்தாட்சி நிலைப்பட,நூலின் கனதி, தரமான காகிதங்கள்,ஒவ்வொரு எழுத்தாளர்களின் துறைசார் தகுதிகள் , சுயங்கள், எண்ணத்தின் திறவுகோல்கள் என அவர்களின் அட்டைப் படங்களுடன் பிரசுரமாகி இருப்பது கலைஞர்களை மேலும் ““செதுக்கி வடித்த சிற்பமாக““ எம்மனக்கண்ணில் ஆழவேரூன்றி நிலைக்க வைக்கிறது.

இருபெரும் படைப்பாளர்கள் முன்னிற்க துணைசேர் கலைஞர்களாக பலரின் ஒத்துழைப்பு ““படைப்பாளர்““ நூலின் மாபெரும் சேவையாக மிளிர்ந்துள்ளது ஒன்றுதிரட்டல் , நெறிப்படுத்தல், சரிபார்த்தல், வடிவமைத்தல், நூலாக்கல் என எண்ணற்ற பணிகள் வலுப்பட்டே வெளியாகிய இந்நூல் காலத்தின் கருத்தரிப்பு, தேடற்கரிய பொக்கிசம், ஜேர்மனியில் புலத்தின் சான்றுரைக்கும் சம்பவத்திரட்டு எனில் மிகையாகாது. நீண்டநாள் உழைப்பின் படைப்பாளர் பிரசுரம் தடம்பதித்து, தமிழ்நிலைத்து உலகில் உலா வர ஒத்திசைந்த அத்துணை சேவையாளர் களுக்கும்முன்மொழிந்து முனைப்பாக்கி முத்திரைபதிக்க வைத்த திரு. பாக்கியநாதன் (B.A).தமிழ்மணி சி.இராஜ கருணா அவர்களுக்கும் எம்தலை சாய்ந்து நன்றிகளையும் வாழ்த்துக்களையும் மனம் நிறைந்து சமர்ப்பிக்கிறோம். அளப்பெரும் பணியிது. ஆணிவேராகி அகிலத்தில் நிலைக்கும். சாலவும் சிறப்பு சரிதமாய் தொடரட்டும் முனைப்பு. 83 மலர்களுடன் எண்ணற்ற கலைஞர் குழாமுடன் **திருமதி. வசந்தா ஜெகதீசன்**







# "அப்துல் ஹமீத் வழிப்போக்கன் அல்ல வழிகாட்டி"

● பேராசிரியர் மு.நித்தியானந்தன்

அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதியுள்ள 'வானலைகளில் ஒரு வழிப்போககன்' நூல் அறிமுக விழா பிரிட்டன் தலைநகர் லண்டனில் Winston Churchill Theatre கலையரங்கில் 08.10.2022 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. எஸ்.கே.ராஜென் 'உலகத்தமிழ்க் கலையகம்', ரி.சிவ குருநாதன் 'Concern Sri Lanka Foundation' ஆகியோர் 'வானலைகளில் ஒரு வழிப் போக்கன்' நூல் அறிமுக விழாவை ஏற்பாடு செய் திருந்தனர்.





இலங்கை வானொலி வரலாற்று நாயகன், ஒப்பற்ற மாபெரும் ஒலி பரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் அரை நூற் றாண்டு கடந்த தனது ஒலிபரப்புத் துறை சார்ந்த வரலாற்றை முதன் முறை யாக எழுத்தில் பதிவு செய்துள்ளார்.

50 ஆண்டுகளுக்கு முன்னர் எம்மி டம் ஒரே ஒரு ஒலிபரப்பு நிலையம் தான் இருந்தது. அது அன்று இலங்கை வானொலி, இன்று இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாப னம். 50 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட இன் றைய காலகட்டத்தில் தமிழ் வானொலி நிலை யங்கள் பல்கிப் பெருகிவிட்டன. ஒலிபரப் பின் தார்ப்பரியம் புரியாமலேயே வானொலி நிலையங்கள் நடைபெறுகி ன்றன. பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள் எழு தியுள்ள இந்த நூ ல் உலகில் வானொ லியின் தோற்றம் பற்றி யவிபரத்தைக் கூறுகிறது. இலங்கையில் வானொலி ஒலிபரப்பின் ஆரம்பத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இலங்கை யில் ஆரம்பகால ஒலிபரப்பாளர்கள் ஒலிப ரப்புத் துறைக்கு வழங்கிய பங்களிப்பு, அவர்களின் வகிபாகம் என்பவை இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளது.

அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதியுள்ள 'வானலை களில் ஒரு வழிப்போக்கன்' நூல் சாதாரண வாசிப்புக்கு உரியது என்று கூறிவிடமுடி யாது. ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு தகவல்கள் இந்த நூலில் நிறைந் திருக்கின்றன. இன்றைய இளந்தலைமுறை ஒலிபரப்பாளர்கள் தம்மை ஒரு நேர்த்தியான ஒலிபரப்பாளராக நிலை நிறுத்த இந்த நூல் பெரிதும் துணை புரியும். இலங்கை ஒலி பரப்பு வரலாற்றை அறிந்துகொள்ள அருமையான நூல். அமெரிக்காவிலும், கனடாவிலும் வெளியிட்டு வைக்கப்பட்ட அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதியுள்ள 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூல் லண்டன் மாநகரில் அறிமுகவிழா கண்டது.


## ஆனந்தி சூரியப்பிரகாசம்:

பி.பி.சி.தமிழோசை புகழ் ஆனந்தி சூரிய ப்பிரகாசம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். புத்தகம் அருமையாக உள்ளது என்று தொடங்கியவர் அருகில் அமர்ந்திரு ந்த அப்துல் ஹமீத் மீது அன்பு கொண்டு பேசி ஒரு செவ்வி காண ஆரம்பித்தார். அந்த ளவுக்கு அப்துல் ஹமீத் அவர்களின் நூல் ஆனந்தி அவர்களைக் கவர்ந்து கொண்டது.

## மாலி:

ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் 'ஈழநாடு' மாலி அவர்கள் இலங்கை வானொலி ஒலி பரப்பின் ஆரம்பத்தையும், உலக ஒலிபரப்பின் ஆரம்பத்தையும் நினைவுபடுத்தியவர், கொழும்பு வானொலி, இலங்கை வானொலி ஆரம்பம் பற்றியும், இலங்கை வானொலி யின் முதல் அறிவிப்பாளர் சோ.நடராஜா, இலங்கை வானொலி முதல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சோ.சிவபாதசுந்தரம் எனப் பல முன்னோடிகள் பற்றி எடுத்துக்கூறினார். வர்த்தக சேவையின் ஆரம்பம் பற்றிக் குறிப் பிட்ட மாலி அவர்கள் இலங்கை வானொலி யின் ஒலிபரப்புத் தரத்துக்கு காரணிகளாய் அமைந்திருந்தவைகள் பற்றியும், எஸ். பி.மயில்வாகனன் அவர்களின் பணியையும் அவர் மூலம் இலங்கை வானொலி அடைந்த புகழையும் விரித்துரைத்தார். இன்று உலகத் தமிழர்களை ஆளும் குரல் அப்துல் ஹமீத் எனப் புகழாரம் சூட்டினார்.

25 ஆம் பக்கம் பார்க்க...



Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de



# அழையா விருந்தாளி



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

"எங்க, எத்தினை மணிக்கு தாலிகட்டு " எண்டு கேக்க றூாயவளயி இல தானே invitation இருக்கு பாருமன் எண்டு மனிசி சொல்லிச்சுது. நான் பாவாடை சட்டை போடமாட்டன் எண்ட சின்னனுக்கும் மனிசிக்கும் நடந்த சண்டைக்கு நடுவில மாட்டுப் படாமல் ஒரு மாதிரி தப்பி வெளிக்கிட்டு கலியாண வீட்டுக்கு மண்டபத்திற்கு போய் இறங்கி உள்ள போக வாசலில வைச்ச விளக்கு கூடுபத்தி எண்ணெய் இல்லாமல் புகைஞ்சு கொண்டிருந்திச்சுது.

பாவம் எபையெட இல்லைப்போல "hello hello" எண்டு ஒரு வயதை போகப்பண்ண விடாமல் பிடிச்ச அம்மா கோலத்துக்கு குறுக்கால i phone Xl போனா. பத்தாயிரத்துக்குப் போட்ட கோலம் photo காரனுக்கு மட்டும் எண்ட படியால் அவன் வந்தோன்னயே படத்தை எடுத்திட்டான் எண்டு ஆறுதல் பட்டிச்சினம் ஆரோ. குறுக்கால போன அம்மா phone கதைச்சு முடிச்சிட்டு வந்து வெளிக் கண்ணாடீல கொண்டையையும் Saree ஐயும் adjust பண்ணீட்டு உள்ள திருப்பியும் (அலங்) கோலத்துக்குக் குறுக்கால போனா phone Xl ஆனா இப்ப படம் எடுக்க.

மண்டபத்துக்குள்ள வந்து இடம் தேடிப் போய் கண்டு பிடிச்சு நாங்கள் இருக்க மாப்பிளையின்டை தாய் தேப்பன் மேடையில இருந்தபடி கண்ணால ஒரு ஹை எண்டிச்சினம். வந்து இருக்க முதல் யூனிபோர்ம் போட்ட படி வந்த சிலர் நாலு கலரில போத்தில் கொண்டு வந்து தந்திச்சினம் . என்னடா ஒருத்தரும் எங்களை கவனிக்கேல்லை எண்டு பாக்க, வந்த ஆக்களை எல்லாம் மறக்காம வீடியோக்காரன் ரெண்டு தரம் டபைாவ ஐ பிடிச்சு படமும் எடுத்தான்.

ஆரெண்டு தெரியாட்டியும் கொஞ்சம் மேளத்தையாவது கேப்பம் எண்டு தெரியாத்தனமா நாதஸ்வரம் இருந்த மேடைக்குப் பக்கத்தில sound box க்கு பக்கம் போய் இருக்க " ஓஓஓ சொல்றியா மாமா" பாட்டு செவிப்பறையை உடைச்சு தொண்டையை அடைச்சுது. At least கலியாண மேடையையாவது பாப்பம் எண்டால் paparazzis மாதிரி முன்னால கமராக் காரர் பத்துக்கும் மேல நிக்க என்ன செய்யிற எண்டு போட்டு பேசாம வழமை போல் அனுபவத்தை எழுத போனை எடுத்தன்.


கோயிலுக்கு காசைக் குடுத்திட்டு live stream இல கும்பாபிசேகம் பாக்கிற மாதிரி, கலியாண வீட்டுக்கு sponsor பண்ணினவைக்கு live stream போகுதாம் உங்களுக்கும் link ஐ அனுப்பிறன் எட்டி எட்டிப் பாக்காமல் இருந்த படியே பாக்கலாம் எண்டு advice தந்தார் வீடியோக்காரத் தம்பி ஒருத்தர். அவரைக்கேட்டு எங்கள் மூண்டு பேரையும் சேத்து ஒரு படத்தை எடுத்து சொந்தங்கள் குறூப்பில போட்டன். போட்டிட்டன் எண்டதுக்காக online ல வேலை செய்யிற சொந்தங்கள் எல்லாம் வழமை போல பாத்திட்டு nice, Huggies,cutந எண்டு போட, எல்லாத்திக்கும் உச்சமா வீட்டை போய் நாவூறு சுத்திப் போடுங்கா எண்டு அறிவுரையும் வந்தது. கோயில்ல மேளகாரர் தீபத்தின்டை value க்கு ஏத்த மாதிரி சனத்தை சாமியைப் பாக்க வைக்க இறுக்கி அடிக்கிறது போல,இங்கையும் மேளகாரர் மைக்குக்குள்ள இறங்கி நிண்டு அடிக்க நிமிந்து பாத்தா தாலி கூறைத்தட்டு கை மாறிச்சுது.

தாலி கூறைத் தட்டைக் சனத்துக்கு காட்டிக்கொண்டு வர வெளிக்கிட்டவருக்கு பாவம், தலைப்பா கட்டி முடிக்கவே நேரம் போன தாலேம், மேக்கப் காரி புறுபுறுக்கத் தொடங்கினதாலையும், முன்வரிசைக்காரருக்கு மட்டும் தட்டைக் காட்டியும் காட்டாமலும் திருப்பிப்போய் குடுக்க,பொம்பிளை நிண்ட கடழறநச பசைடள ஐயும் விட்டிட்டு கடகடவெண்டு மேடையால இறங்கிப் போனா. வெளிநாட்டால வந்துதுகள்,வெள்ளைக்காரிகள் எல்லாம் இஸ்டப்பட்டு வேட்டி சேலையோட வர, எனக்கு இது தான் வசதி எண்டு எங்க போனாலும் போடிற trouser மஞ்சள் சேட்டோட வந்த உள்ளூார்க்காரர் சிலர் இன்னும் தாலி கட்டேல்லயே நாங்கள் வேளைக்கே வந்திட்டம் எண்டு கவலைப்பட்ட படி ரெண்டாவது தரமும் சோடா வாங்கிக் குடிச்சினம். நாங்கள் பொம்பிளையைக் காணாமல் பொறுமை இழக்க மண்டபக்காரன் வந்து சாப்பிடலாம் எண்ட சொல்லமுதல் இருந்த சனம் தாலி கட்ட முதலே தேஓடிப் போய் சாப்பாட்டு queue இல நிக்க, நானும் போய்ச் சாப்பாட்டுக்கு நிண்ட queue வையும் சாப்பாட்டையும் பாத்திட்டு சாப்பிடாமலே திரும்பி வந்தன். தாலிகட்டி முடிஞ்ச உடனயே சின்னனா றளைாபண்ணிற queue ஒண்டு உருவாகி நிக்க நானும் அதில உள்வாங்கி நிண்டன். பால் பழம் குடுக்கிறதை சனம் பாக்காம சால்வையால மறைச்சுப்பிடிச்சதை கமராக்காரன் முழுசாக் கவர் பண்ணி எடுத்தான்.


ஐயர் பாவம் பொம்பிளை பழம் சாப்பிடிற வெக்கபடுறா எண்டு நெச்சு ஒரு பகிடி சொல்ல ஒருத்தரும் சிரிக்காம நிக்கிறதை பாத்திட்டு சங்கடப் பட்டுக் கொண்டு இருந்தார். சுத்திக் கட்டின பூந்தி லட்டடை ஸ்பெசல் மேக்கப் போட்ட பிள்ளைகள் extra special decorate பண்ணின கூடையில கொண்டு வந்து தர ரெண்டை எடுத்து சாப்பிடாமப் பொக்கற்றுக்க வைச்சதைப் பாத்தவனுக்கு, மூத்தவை ரெண்டு பேரும் வரேல்லை எண்டு விளக்கத்தை சொன்னன்.

28 ஆம் பக்கம் பார்க்க...





Gopara Gnanam GMBH
ESTD 1992
"புத்தம் புதிய வரவுகள்"
எம்மிடம் நீங்கள் விரும்பும் அனைத்து ஆடைகளும் புதுப் புது டிசைன்களில் நீங்கள் உங்கள் விருப்பம்போல் மகிழ்வாகத் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்
Rheinische str.62- 44137 Dortmund | Tel:0231 5348 2206 / 0176 616 92 900

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்

N.K.Raguraman
Dresdener Str.6 50126 Bergheim Germany

Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240

# உன்னையன்றி இன்பமுண்டோ?



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

**உன்னையன்றி இன்ப முண்டோ**
**உலகமிசை வேறே!**
**பொன்னை வடிவென் றுடையாய்**
**புத்தமுதே,திருவே!**
**மின்னொளி தருநன் மணிகள்**
**மேடை யுயர்ந்த மாளிகைகள்**
**வன்ன முடைய தாமரைப் பூ**
**மணிக்குள முள்ள சோலைகளும்,**
**அன்ன நறு நெய் பாலும்**
**அதிசயமாத் தருவாய்!**
**நின்னருளை வாழ்த்தி என்றும்**
**நிலைத்திருப்பேன்,திருவே!**

செயற்கரிய செய்யத் துணிந்த திகட சக்ர அமைப்பின் " திருவடிக்கீழ் சொல்லிய பாட்டு " என்னும் தொடர் நிகழ்வு பிரதி வெள்ளிக்கிழமைகளில் சமூக வலைத் தளங்களில் பதிவேற்றப்பட்டு வந்தது.

பக்தி இலக்கியங்களைச் சமகால இளம் மனங்களில் நிரப்பும் பெரும் நோக்கினோடும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திரவியங்களை பதிவாக்கிட வேண்டும் என்ற முனைப்போடும் திருவடிக் கீழ் சொல்லிய பாட்டு முத்தமிழ் படைப்பாக வெளிவந்தது. திருமுறைகளை பண்கொண்டு இசைக்க, அதன் பொருளுணர்ந்து கூறி, அபிநயமும் காட்டும் இப்படைப்பு 98 பாகங்களைத் தொட்டுவிட்டது.

இதன் 50 ஆவது அத்தியாயம் நிறை நறையென இன்பம் தந்து பார்வையாளர் மனங்களை ஈரப்படுத்தியதற்குப் பல காரணங்கள் உண்டு. 50 ஆவது பொன் அத்தியாயம் அல்லவா ? பொன்னென மின்னும் திருமகளைத் துதிக்கும் பாடல் மீது நாட்டம் வந்தது. அதிலும் பொன் என்ற சொற்சேர்க்கை இருந்தால் மேலும் சிறப்பெனப் பட்டது. ஐயன் பாரதி இருக்கப் பயம் ஏன் ?

பொன்னை வடிவென் றுடையாய்
புத்தமுதே,திருவே!

பாரதியின் இயலைப் பெற்றதால், இதற்கான இசையை அமைக்க பாரதியின் கொள்ளுப் பெயரன் ராஜ்குமார் பாரதி ஐயாவிலும் பிறிதோர் பொருத்தம் உண்டோ? அணுகினோம் அம்மகானை, இசை மட்டுமா பொன் விழா நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராகவும் வருகை தந்து பேரின்பம் தந்தார். 50 ஆவது அத்தியாயம் என்பதால் ஜனக ராகத்தில் 50 ஆவது ராகமான நாமநாராயணி ராகத்தில் இப்பாடலுக்கான இசை அமையவேண்டும் என்பது பக்தையென் விண்ணப்பமானது. நாம நாராயணி பெயரிலும் திருமகள் இருப்பது உச்ச பொருத்தம்.

இந்த ராகத்தை கையாள்வது எளிதல்ல.ஸ்வரங்களுக்கூடாக ராகத்தை அணுகாது இயலுக்கூடாக இசையை அணுகுவது ராஜ்குமார் பாரதி ஐயாவின் தனிச் சிறப்பு. இயற் சேவையை அறிந்து அதன் ரசத்தின் சாரத்தில் ராகத்தை தெளிப்பவர். பாரதி உதிரம் அல்லவா, மொழிப் பிரதானமும் ரசசேர்க்கையும் இசையும் அவர் பிறப்பின் பரிசு.



பீடுடைய வான் பொருளே,பெருங் களியே,சுடர் மணியே,புத்தமுதே, மெத்த மையல் கொண்டு விட்டேன் மேவிடுவாய், நின்னருளை வாழ்த்தி என்றும் நிலைத்திருப்பேன், உன்னையன்றி இன்ப முண்டோ உலகமிசை வேறே? என்று திருமகள் மீது அதி காதல் கொண்டவராய் உணர்வூறுகிறார்.

மின்னொளி தருநன் மணிகள், மேடையுயர்ந்த மாளிகைகள், வன்ன முடைய தாமரைப் பூ,மணிக்குள முள்ள சோலைகளும்,அன்ன நறு நெய் பாலும், ஆடுகளும் மாடுகளும்,அழகுடைய பரியும்,வீடுகளும் நெடுநிலமும் வேண்டுகிறார்.இவர் வேண்டிய ஒவ்வொரு பொருளுக்குள்ளும் உள்ள பெரும் உண்மையை விரித்துச் சொல்ல முயன்றால் கட்டுரை நீளும். ஒன்று மட்டும் மீண்டும் மீண்டும் ஊர்ஜிதமாகிறது. பாரதி சாமானியல்ல. அவதாரம்.

உனக்கு ஈடாக எந்த தெய்வம் உண்டு? உன்னை விட்டால் எனக்கு யார் கதி ? என இறைஞ்சி கேட்கும் வரிகளில் சொட்டும் ரஸ விஸ்தாரம் மிக உச்சம். இப்பாடலை படிக்கும் போது எமக்குள்ள உணர்வு நிலைக்கேற்ப அதன் ரசம் மாறுபடும் வண்ணம் விசால பொருள் பொதிந்திருக்கிறது. இது தான் பாரதி பாடல்கள் தரும் சுதந்திரமும் கூட. பக்தி வேறு காதல் வேறு என்ற பேதமைகளைத் தகர்த்தெறிகிறது. பக்தி மார்கத்தினூடாக சமத்துவம் வேண்டிய காரைக்கால் அம்மை போல, காதலினூடாக ஐக்கியமாகிய ஆண்டாளைப் போல அனைத்துமே ஒன்றாகி எல்லை கடந்த காதல் பக்தியைக் காட்டி நிற்கிறது இப்பாடல்.

திருஞான சம்பந்தர் குறிப்பிட்ட " காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி " என்பதும் இவ்வகை ஒத்ததே. காதலால் கண்ணீர் மல்குதல் என்னும் நிலையை கண்டார்,அமர வாழ்வு எய்துவர் என்பது திண்ணம். அந்த கண்ணீரின் தன்மையை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே இப்பொருள் புரியும். அது வெறும் கண்ணீர் அல்ல, உயிர் நீர். உயிர் கசிந்து விழி வழி வழியும் தேவ நீர். அக்காலத்தில் நம் பழந்தமிழ் கற்றுத் தந்த நற்காதலை இக்காலத்திலும் எம்மால் உணர்ந்தனுபவிக்க முடியுமெனில், எத்தனை கோடி இன்பம் கொண்டோராய் இருப்போம்?

**வாழ்தல் இனிது.**
**காதல் மிக இனிது.**
**நித்தமுனை வேண்டி மனம்**
**நினைப்ப தெல்லாம் நீயாய்ப்**
**பித்தனைப்போல் வாழ்வதிலே**
**பெருமையுண்டோ? திருவே!**
**சித்தவுறுதி கொண்டிருந்தார்**
**செய்கை யெல்லாம் வெற்றி**
**கொண்டே**
**உத்தமநிலை சேர்வ ரென்றே**
**உயர்ந்த வேதமுரைப்ப**
**தெல்லாம்,**
**சுத்த வெறும் பொய்யோடீ?**
**சுடர் மணியே!திருவே!**
**மெத்த மையல் கொண்டு**
**விட்டேன்**
**மேவிடுவாய்,திருவே!**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



@A.J.ENTERTAINMENTS
AJ
ENTERTAINMENT
PRESENTS
HALLO DEUTSCHLAND!
ANIRUDH
LIVE IN GERMANY
Once Upon a Time TOUR
Rudolf Weber ARENA
JUNE 10
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
A CELEBRATION BY
EPIC MONKEYS



# சில நேரத்து மௌனங்கள்! ஆயிரம் ஈட்டிகளின் வலியை விட வலியானது!!!



மாதவி

**காககத்தை கல்லால் எறிந்து கலைத்துவிட்டு இப்போ! கா!! கா!!! காவாம்**

புரட்டாதிச் சனி, ஒரு நாள், (ஒரு நேர) விருந்தினராக ஊரில் காகங்களுக்கு அழைப்பு விடப்படும். கோவில்களில் எள்ளெண்ணை எரித்துவிட்டு வீடு வந்து காகத்திற்கு சோறு வைத்து, அது உண்டபின் தாமும் உண்ணுவர்.

காகமும் மனிதர்களின் கல்லெறிகளை மறந்து, அவர்கள் வைத்த உணவை தான் மட்டும், உண்ணாமல் தன்னினத்தையும் அழைத்து சேர்ந்தே உண்ணும். அந்தக் காட்சியைப் பார்த்து சிறிது வெட்கம் மனிதனுக்கு வந்தாலும், அதனையும் சுதாகரித்துக்கொண்டு, தன் இயல்புக்கு திரும்பிவிடுவான்.

புரட்டாதிச் சனி அன்று, ஆலயங்களில் அன்னதானம் வழங்கப்படும், ஊரில் என்றால் அது அன்று, உண்ண வசதியற்றவர்களுக்கு மட்டும் முதலிடம் கொடுத்து, பின் யாவரும் உண்பார்கள்.



புலம் பெயர்ந்து வாழ்கின்ற வசதி படைத்த நம்மவர்களுக்கும், ஆலயங்களில் அன்னதானம் இங்கு வழங்கப்படுகின்றது. விரத நாட்களில், அவர்கள் வீட்டில் சைவ முறைப்படி சமைத்து, உண்ண வசதியில்லாமல் இருக்கலாம், முதியவர்களாக இருக்கலாம், வேலையில் நின்று நேராக வீடு சென்று ஆலயத்திற்கு வருபவர்களாக இருக்கலாம்.

ஏன் அவர்கள் பெரும் செல்வந்தர்களாகவும் இருக்கலாம், அவர்கள் ஒரு கவளம் சோறு என்றாலும் ஆலயத்தில் உண்ண விரும்புவார்கள்.

ஒரு புரட்டாதி சனி விரதநாள் ஆலயத்தில் எள்ளெண்ணை எரித்து விட்டு, கையிலே ஏந்திய உணவை சில முதியவர்கள் அருகில் போடப்பட்டு இருந்த மேசையில் இருந்து உண்டார்கள்.

இருந்தவர்கள் பலர் நிலத்தில் இருந்தால் தனித்து எழமுடியாமவர்கள். ஆனால் யாவரும் வசதி படைத்தவர்கள்.

காகங்கள் வழமையான நாட்களில் உணவைக் கொத்தி உண்ண வாய் வைக்கும் போது, கல்லடி விழுமே, அதேபோல் ஒரு சொல்லடி அங்கு விழுந்தது.

மேசையில் இருந்து எல்லோரும் எழுப்பவும், கிட்டத்தட்ட தமிழ் தெரிந்த ஒரு ஆமிக்காரன் குரல் போல் இருந்தது.

மேசையில் இருந்து உணவுண்ட முதியவர்கள் எல்லோரும் எழும்பி நின்று, கையில் வைத்து சாப்பிட்டனர். சிலர் ஒரு கையில் தண்ணீர்க் கோப்பை, ஒரு கையில் உணவு. இன்னுமொரு கையை தேட முடியாது, உண்ண முடியாது, தவித்தனர்.

இந்த மேசையும், வாங்கு உங்கள் பாவனைக்கு அல்ல, என்று முதியவர்களை எழுப்பிவிட்டு, ஏனைய ஆலய தொண்டர்களை பேசுவது



போல்,முதியவர்களை பேசிக்கொண்டு, சென்றார். முதியவர்கள் வெட்கப்பட்டார்கள். தமது செயலுக்காக அல்ல. அவர்களை எழுப்பியவரது செயலுக்காக. நடந்த இடம் ஒரு உணவு விடுதி அல்ல. அது ஒரு ஆலயம்.

உரக்கப் பேசியது யார் அவர் என்று பார்த்தபோது, அவர் ஆலய நிர்வாகிகளில் ஒருவர்தான். இது புலம் பெயர்ந்த நாடுகளில் அமைந்த ஆலயங்களில் இது நடக்கவில்லை. ஆனால் நாளை நடக்கலாம். உண்ணும் ஒருவரை இடையில் எழுப்புவது எமது பண்பாட்டுக்கு முரனானது. ஒரு பிச்சைக்காரனாக இருந்தாலும், ஒரு பணக்காரனாக இருந்தாலும் இது நாகரீகம் அல்ல.தாயகத்தில் எவரும் உண்ணும்போதும், உறங்கும்போது ஏன் எதிரியாயினும் பேசுவதில்லை.திட்டித் தீர்ப்பதும் இல்லை. அப்படி வளர்ந்த ஒரு சமூகம்.

அன்னதானம் என்பது பிச்சைக்காரனுக்கு உணவு கொடுப்பதாக எண்ணும் மனநிலையே சிலரிடத்தில் உள்ளது.

முதல் சனி வயதானவர்களை எழுப்பிவிட்டு வீட்டுக்கு போனவருக்கு இரண்டாவது புரட்டாதி சனி அன்று வீட்டில் உண்ண முடியாது தவித்துக் கொண்டு இருப்பதைக் காணமுடிந்தது. ஒரு காகமும் அவர் வைத்த உணவை, உண்ணத்தயாரக இல்லை. வேலி பொட்டுக்குள்ளால், நுழைந்து நுழைந்து அடுத்த வீட்டுக்காகங்களையும், கெஞ்சுகிறார். எனக்கு காககத்தை பார்க்க தன்மானம் உள்ள காகம் போல் தெரிந்தது.

நான் கண்ட காட்சி நாளை நீங்கள் செல்லும் இடங்களிலும் காணலாம். கண்டால் நீங்களும் அந்த தன்மானம் உள்ள காகமாகுங்கள். அல்லது அவர் நாண நன்னையம் செய்துவிடுங்கள்.

ஆனால் அவருக்கு ஏதோவிதத்தில் ஒரு செய்தி சொல்லுங்கள்.

சில நேரத்து மௌனங்கள் ஆயிரம் சொற்கள்விட வலிமையானது. சில நேரத்து மௌனங்கள் ஆயிரம் ஈட்டிகளின் வலியை விட வலியானது.

Willkommen in Ihrer Filiale Duisburg.

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.



Janagran Mahendran
Berater Private Banking

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com






# நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# நாம் சேர்த்து வைக்கும் ஆவணங்களுக்கு என்னாகும்?

நண்பர் ஒருவரை சில ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தேன். அவரது தந்தையின் பொழுதுபோக்கைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அவரது தந்தை பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தவர். அவருடைய வாழ்க்கையில் பெரும்பாலான பகுதியை வாசிப்புக்காகவே உயில் எழுதி வைத்தவர். அவரது வீட்டில் எங்கெல்லாம் அவர் உலவுகிறாரோ அங்கெல்லாம் சில புத்தகங்கள் தவறாமல் இருக்கும். எப்போதெல்லாம் நேரம் கிடைக்குமோ அப்போதெல்லாம் அதை எடுத்து வாசிப்பார். குறைந்த பட்சம் நூறு பக்கங்களையாவது வாசிக்காமல் அவர் தூங்குவதே இல்லை.




நூல்களைக் குழந்தைகளைப் போலப் பாவிப்பார். மெதுவாகக் கையாள்வார், மென்மையாய் தடவிக் கொடுப்பார். மிக நேர்த்தியாய் அடுக்கிவைப்பார். அடிக்கடி எடுத்து துடைத்து, தூய்மைப்படுத்தி வைப்பார். அவற்றைப் பார்வையாலேயே நேசிப்பார்.

அபூர்வமான நூல்களைத் தேடி பயணிப்பார். சில நூல்களுக்காக ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரம் கூட பயணித்திருக்கிறார். சில நூல்களுக்காக தனது நிலத்தில் இருந்த மரங்களையெல்லாம் வெட்டி விற்றிருக்கிறார். சில நூல்களுக்காக பலரிடம் கெஞ்சிக் கூத்தாடியிருக்கிறார்.

நூல்களின் மீதான அவரது வேட்கை, கேட்கக் கேட்க மகிழ்ச்சியாகவும், பிரமிப்பாகவும் இருந்தது. கடைசியாக அவர் சொன்ன வார்த்தை தான் தூக்கி வாரிப் போட்டது.

'அப்பா இறந்து சில வருஷம் வரைக்கும் அவர் ஞாபகார்த்தமா அந்த புத்தகங்களை



எல்லாம் வெச்சிருந்தோம். எனக்கு வாசிக்கிற பழக்கம் இல்லை. என் பிள்ளைகள் ஆங்கில புத்தகம்தான் தான் படிக்கிறாங்க. இடம் அடச்சுட்டே இருந்துச்சு. என்ன பண்றதுன்னே தெரியல. அப்பாவோட ஹாபி எங்களோட தலைவலியா போச்சு. கடைசில போன வாரம் தான் அதையெல்லாம் பேப்பர் கடைக்கு போட்டேன்' என்றார்.

வாட். எல்லாத்தையும் வித்துட்டியா ?

ஆமா, கிட்டத்தட்ட மூவாயிரம் புத்தகங்கள் இருந்துச்சு. பழைய பேப்பர் கடையில போட்டேன். நல்ல ஒரு தொகை கிடைத்தது. பையனுக்கு நாலஞ்சு உடுப்புகள் எடுத்தேன் என்றார்.

தந்தையார் தவமாய்த் தவமிருந்து வாசித்து, நேசித்து, சேகரித்த நூல்கள் ஏதோ ஒரு காகிதக் கடையில் குப்பையோடு குப்பையாய் குவிந்து கிடப்பதை நினைக்க மனம் வலித்தது. தந்தையின் கனவுகள் தந்தையின் பிரிவோடு காலொடிந்த பறவையாய் விழுந்து கிடந்ததை மனம் உணர்ந்தது.

நாம் இன்றைக்கு ஆசை ஆசையாய் சேமித்து வைக்கின்ற ஆவணங்களுக்கு நாளை என்ன



நேரும் ? இந்தக் கேள்வியே நமது மன வெளியில் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கக் கூடியது. நாம் சேமிக்கும்போது காலா காலமாக அது நிலைபெறும் எனும் சிந்தனையில் சேமிக்கிறோம். ஆனால் உண்மை என்ன ?

சிலர் ஓவியங்களைத் தேடித் தேடி சேமிக்கின்றனர், சிலருக்கு பழைய சிலைகள், சிலருக்கு ரூபாய் நோட்டுகள், சிலருக்கு நூல்கள், சிலருக்கு வரலாற்றுத் தடையங்கள். எல்லாமே அடுத்த தலைமுறைக்கு அவசியமாய் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. எத்தனையோ வீடுகளில், எத்தனையோ மனிதர்களின் மரணத்தோடு அவர்களுடைய பொக்கிஷங்களெல்லாம் தேவையற்றவைகளாகிவிடுகின்றன.

ஒவ்வொருவருடைய சேமிப்பும் அவருடைய கனவுகளின் துளிகள்

ஒவ்வொருவருடைய சேமிப்பும் அவருடைய கனவுகளின் துளிகள், அவர்களிடைய ஆசைகளின் பதிவுகள், அவர்களுடைய தேடல்களின் தடயங்கள், அவர்களுடைய சாதனைகளின் உச்சரிப்புகள்.

17 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நாம் சேர்த்து வைக்கும் ஆவணங்களுக்கு என்னாகும்?

ஆனால் அவை எல்லாமே ஒரு வாழ்க்கை முடிந்தவுடன் முடிந்து போகிறது. கொஞ்ச நாள் அந்த நினைவுகளின் நீட்சி மனிதர்களுக்கு தேவையாய் இருக்கிறது. அதன் பின் அவை ஆறாவது விரல் போல அவசியமற்றுத்

தொங்குகின்றன. எல்லோருமே அவர்களுடைய ஆவணங்கள் காலங்களைக் கடந்து அவர்களுடைய பெயரைச் சொல்ல வேண்டும் என்றே நினைக்கின்றனர். ஆனால் எல்லோருக்கும் அது வாய்ப்பதில்லை. சிலருடைய ஆவணங்கள் சரியான இடத்தில் சேர்ந்து சில தலைமுறைகள் தாக்குப் பிடிக்கின்றன. ஆனால் மற்றவர்களுடைய



வாழ்நாள் சேமிப்புகளெல்லாம் சிதிலமடைந்து போகின்றன.

அப்படி காலங்களைக் கடந்து நிலைக்க வேண்டுமெனில் நாம் சில சிறப்பான ஆவணங்களைச் சேமிக்கலாம். உதாரணமாக, மனித நேயத்தைச் சேமிக்கலாம். அன்பின் இழைகளினால் நாம் இந்த வாழ்க்கையில் செய்கின்ற நல்ல செயல்கள் நமக்காய் விண்ணகத்தில் ஒரு இருக்கையை உருவாக்கும். இந்த உலகில் ஏராளமான மனிதர்களின் இதயத்தில் நமது பெயர் அன்பின் தூரிகையால் வரைந்து வைக்கப்படும்.

அன்னை தெரசா சேமித்த ஆவணம் என்பது அன்பின் செயல்கள் தானே !. அந்த செயல்கள் அவரது பயணத்தின் பாதைகளெங்கும் நிரம்பியிருக்கின்றன. அவை காலத்தால் அழிவதில்லை. அவை இதயங்களிலிருந்து இதயங்களுக்கு இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த உலகில் அன்பின் ஆவணம் வேண்டாம் எனும் ஆணவம் இதுவரை யாருக்கும் வரவில்லை. ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு அன்பை எதிர்பார்ப்பவர்களாகவே எல்லோரும் இருக்கிறோம்.

இல்லையேல் அறிவின் பகிர்தலை



நிகழ்த்தலாம். அன்பைப் போலவே அறிவும் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாறி மாறி பயணித்துக் கொண்டே இருக்கும். கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை போல அறிவின் பதிவுகள் ஒருவரை விட்டு ஒருவருக்குத் தாவி சென்று கொண்டே இருக்கும். அத்தகைய அறிவின் இழைகளை சேமிக்கலாம். அறிவின் இழைகளை அடுத்தவரின் சிந்தனைகளில் சேமித்து வைக்கலாம்.

அது காலத்தால் சேதமடைவதில்லை. வருடங்களால் திருடப்படுவதில்லை. அவற்றுக்கு வயதானாலும் இறந்து விடுவதில்லை. தேவையில்லை என யாரும் உதறிவிடுவதும் இல்லை.

நாம் சேமிக்கின்ற பொருட்கள் நாளை பயனற்றதாய் இருக்குமா, பயனுடையதாய் இருக்குமா என்பதை நாம் எதை சேமிக்கிறோம் என்பதே முடிவு செய்யும். இவ்வுலகின் ஆசைக்கானவற்றைச் சேமித்தால் அவை பிற்காலத்தில் பயனற்றதாகலாம். இவ்வுலக மனிதர்களின் தேவைக்கானவற்றைச் சேமித்தால் அவை காலம் காலமாய் நிலைக்கலாம்.

அன்பைச் சேமிப்போம், மனிதத்தைச் சேமிப்போம், உறவுகளைச் சேமிப்போம். நாம் சேமிப்பவை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

வாழையடி வாழையாய் நாளைகளைத் தாண்டியும் அவை வாழ்ந்து கொண்டே இருக்கும்.

---

# நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் நகுலா சிவநாதன்

கடந்த 32 வருடமாக யேர்மனியில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு தாய்மொழியைக் கற்பித்து வரும் சிறந்த ஆசிரியர் இவர். பல நாடுகள் சென்று ஆசிரியப்பயிற்சியும் கருத்தரங்கும் செய்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. வெற்றிமணியின் வாழ்த்துகள்.




யேர்மனியில் 32 வருடம் ஆசிரியப்பணியாற்றும் திருமதி நகுலா சிவநாதனுக்கு இந்தியாவில் நிலா முற்றக் குழுமம் நல்லாசிரியர் விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

பிரபல எழுத்தாளர் கல்விமான் லேனா தமிழ்வாணன் அவர்கள் இந்த விருதை வழங்கிச் சிறப்பித்தார்.




01.10.2022 அன்று யேர்மனி கஸ்ரோப் நகரத்தில் வாணிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் வசிக்கும் இலங்கையில் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட பெற்றோர்கள்.
இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள்.
யேர்மனியில் Nordrhein-Westfalen மாநிலத்தில் வசிக்கும் நிரந்தரமாக நல்ல வேலை செய்யும் 33 வயது நிரம்பிய தங்கள் மகனுக்கு மணமகளைத் தேடுகிறார்கள்.

தொடர்பு இலக்கம்: ( 49)176 7024 3596



மணமகள் தேவை!

திருமண சேவையில் இணைந்து நீங்களே உங்களுக்கு ஏற்றவர்களைத் தேடிக்கொள்ளலாம்.
தரகுப்பணம் அறிவிடப்படமாட்டாது.

விளம்பரத்ததிற்கு மட்டும் அறவிடப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அகதி வாழ்வு

சிறுகதை

கே.எஸ்.சுதாகர்
(அவுஸ்திரேலியா)

"சிந்து" மேக்கப் போடுற அன்ரி வந்திடுவா. சீக்கிரம் ரெடியாகு" அம்மா குசினிக்குள் நின்று கூக்குரலிட்டார். தான் கூப்பிட்டது, எனக்குக் கேட்டிருக்காது என்ற நினைப்பில், என் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தார்.

"என்ன பிள்ளை? இன்னும் ரெடியா கேல்லையே! ஜோதி ரீச்சரல்லே வரப் போறா."

"ஜோதி ரீச்சரா? அவா ஏன் இஞ்சை வரவேணும்?"

"அவா தானே உனக்கு மேக்கப் போடப் போறா!"

நான் திடுக்கிட்டுப் போனேன். மேக்கப் போடுற அன்ரி வரப்போகின்றா என்று சொன்னாவேயொழிய, யார் என்று இதுவரை அம்மா சொன்னதில்லை. அம்மாவின் பள்ளி நண்பி என்றோ" அதற்கும் மேலாக என்னுடைய பாடசாலை ரீச்சர் என்றோ அம்மா சொல்லவில்லை. முன்னரே தெரிந்திருந்தால் கட்டாயம் மறுத்திருப்பேன்.

"அவா என்னுடைய ஸ்கூல் ரீச்சர். ரீச்சருக்கு ஒரு மரியாதை குடுக்க வேண்டாம். எனக்கு இதிலை துளிகூட விருப்பம் இல்லையம்மா"

"இதிலை அவமானப்படுறதுக்கு என்ன இருக்கு. பெருமைப்படு. உனக்குப் பள்ளிக்கூடத்திலை படிப்பிச்சதோடை, உன்ரை கலியாணத்திலும் கலந்து கொள்ளுறா எண்டதை நினைச்சுப் பெருமைப்படு." நானும் அம்மாவும் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கும்போது கதவு பெல் சத்தம் கேட்டது. "ஜோதி வந்திட்டா போல கிடக்கு. ஒண்டரை மணித்தியாலம் கார் ஓடி வந்திருக்கின்றா. உன்னை மண்டாடிக் கேக்கிறன். கலியாணவீட்டிலை குழப்பம் செய்யாதை." வாசல் கதவை நோக்கி அம்மா விரைந்து போனார். நான் கதவை மெதுவாக நீக்கி, உள்ளிருந்து எட்டிப் பார்த்தேன்.

"என்னுடைய ஒரு ஸ்ருடண்டிற்கு மேக்கப் போடுறது, எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்குத் தெரியுமாடீ" ரீச்சர் சொல்லுவது கேட்கின்றது.

"ஏன் இப்படி ஜோதி ரீச்சர் மாறிப் போனார்? அவருக்கு அவுஸ்திரேலியாவிலை ஏன் ரீச்சிங் வேலை கிடைக்கவில்லை?" அங்கலாய்த்தேன் நான்.

நான் ஆறாம்வகுப்பு வரையும் இலங்கையில் படித்தேன். அதன் பின்னர் அவுஸ்திரேலியா வந்துவிட்டேன். இலங்கையில் எனக்கு ஜோதி ரீச்சர் சயன்ஸ் படிப்பித்தார். அப்போது அவருக்கு முப்பது வயதுதான் இருக்கும். தூரத்தில் கண்டவுடனேயே மாணவர்கள் பயத்தில் ஒடுங்குவார்கள். அவ்வளவு மரியாதை. நன்றாகப் படிப்பிப்பார். ஆனால் பொல்லாதவர். ரீச்சர் அறைக்குள் நுழைந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினார்.

"நீ என்னுடைய மகளைப் போல" நான் சிலிர்த்துப் போனேன். ரீச்சர் அடித்து அழுத காலம் போய், இன்று ரீச்சர் அணைத்த போது அழுகை வந்தது. அவர் எனக்கான அலங்காரத்தை ஆரம்பித்தார்.

"எந்த நிலையிலும் நீங்கள் உங்களை ஒருநாளும் விட்டுக் கொடுக்காதீர்கள்" என்று பாடசாலை நாட்களில் அடிக்கடி சொல்லும் ரீச்சர் இன்று தன்னுடைய தொழிலையே விட்டுவிட்டார்.

"ஏன் ரீச்சர்".. உங்கள் ஹஸ்பண்ட் வேலைக்குப் போவதில்லையா?"


எனது கேள்விக்கு பதில் தராத ரீச்சர், "அகதி வாழ்வின் அவலங்களில் இதுவும் ஒன்று" என்று சுருக்கமாகச் சொன்னார். தொடர்ந்து, "நான் இந்தத் தொழிலைச் செய்வதற்கு யாருடைய வற்புறுத்தலும் காரணம் இல்லை. உழைத்துச் சாப்பிட வேண்டும். அவ்வளவும் தான்" என்றார். அவர் குனிந்து நிமிர்ந்து அலங்கரிக்கும் போதெல்லால், அவர் கழுத்திலிருந்த தாலி ஊஞ்சலாடியது. கணவர் இருந்திருந்தால் இன்று வந்திருப்பார். அப்பிடியென்றால், பிரிந்து வாழ்கின்றார்களா?

என் கையைப் பிடித்து நிலைக் கண்ணாடியருகே கூட்டிச் சென்றார். என்னையே என்னால் நம்ப முடியவில்லை. ஒரு அழகு தேவதை போல என்னை மாற்றியிருந்தார்.

"மகளே...!. அம்மாவைப் போல உன் வாழ்வு சிறக்க என் வாழ்த்துகள். உன் திருமண நாளன்று ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்கின்றேன் கேள். உனது ஜோதி ரீச்சர், விரைவில் அவுஸ்திரேலியாவில் ரீச்சராகப் போகின்றார்."

உள்ளே ஆரவாரம் கேட்டு அம்மா வந்து எட்டிப் பார்க்கின்றார்.

---



அவ்வையார் எழுதிய நீதி வெண்பா யேர்மன் மொழியில் கையெழுத்துப்பிரதி.






முதலாவது தமிழ் பைபிள்

# அகம் புறம் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் போக்கிங்கள்!

## 8.10.2022 லிருந்து 7.5.2023 வரை ஆறுமாதம் வரை நடைபெற உள்ள அகமும் புறமும் கண்காட்சிக்கு வாய்ப்புள்ள அனைவரும் வந்து பாருங்கள்!

ஜெர்மனியில் இருந்து தமிழ்நாட்டின் தரங்கம்பாடிக்கு 1706 ஆம் ஆண்டு கப்பல் வழி பயணம் செய்து வந்த பாதிரியார் சீகன்பால் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு தமிழ் மொழியைக் கற்று அவர் மிகவும் வியந்து கற்ற மூன்று பழந்தமிழ் அற நூல்களை ஜெர்மனிய மொழியில் மொழி பெயர்த்தார், அவ்வையார் எழுதிய நீதி வெண்பா, கொன்றைவேந்தன், உலக நீதி ஆகிய மூன்று நூல்களையும் அவர் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்து 1708 ஆம் ஆண்டு அதனை கையெழுத்துப் பிரதியாக உருவாக்கினார். இந்த மாபெரும் பொக்கிஷம் ஜெர்மனி ஹாலே நகரில் உள்ள பிராங்க கல்வி நிறுவனத்தில் பாதுகாக்கப்படுகிறது. தற்போது ஜெர்மனி ஸ்டுட்கார்ட்டு நகரில் லிண்டன் அருங்காட்சியகத்தில் நடைபெறும் அகம் புறம் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அரும் பொருட்களில் இதுவும் ஒன்று. அத்துடன் 1710 ஆம் ஆண்டு பாதிரியார் சீகன்பால்க். அவர்களால் உருவாக்கப்பட்ட முதல் தமிழ் பைபிள் பொதுமக்கள் பார்வைக்காக இங்கு வைக்கப்பட்டுள்ளது. பல ஐரோப்பிய தமிழறிஞர்கள் சில ஆண்டுகளிலேயே தமிழ் மொழியைக் கற்றிருக்கின்றார்கள்.. அதன் பெருமையை மொழிபெயர்த்து தங்கள் நாடுகளில் பரவலாக்கியிருக்கின்றனர் என்பதை அறிந்தாவது ஊக்கம் பெறுங்கள்.

ஜெர்மனி லிண்டன் அருங்காட்சியகத்தில் நடைபெறுகின்ற 6 மாதகால தமிழ் கண்காட்சியைக் காண உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ், வரலாற்று ஆர்வலர்களை இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம். –அரிக்கமேடு அகழாய்வுச் சின்னம் –ஆதிச்சநல்லூர் முதல் அகழாய்வின் கண்டுபிடிப்புகள் –நாகப்பட்டினம் புத்தர் சிலைகள் –சமண மத சின்னங்கள் –தரங்கம்பாடியுடன் ஜெர்மனியின் 400 ஆண்டுகால தொடர்புகளை விவரிக்கும் செய்திகள் –ஈழப்போர் தொடர்பான இலங்கை தமிழ் மக்களின் வலி நிறைந்த புலம்பெயர்வும் அதன் பின்னருமான நிகழ்வுகள் –தமிழ் இஸ்லாம் –தமிழ் கிருத்துவம் –வைணவ தமிழ் மரபு –சைவம், சிவ வழிபாடு –கலைகள், கூத்து –திராவிடர் கழகம், பெரியார், மறுமலர்ச்சி காலம் –தமிழ் சமையலறை, காய்கறிகள் –தமிழ்ச்சினிமா, அது ஏற்படுத்திய தாக்கம் ஆகியவற்றோடு... திருவள்ளுவருக்கு வைக்கப்பட்ட முதல் ஐம்பொன் சிலையையும் காண வாருங்கள். கண்காட்சி 8.10.2022 லிருந்து 7.5.2023 வரை நடைபெறும்.

முகவரி:
**Linden Museum, Hegelplatz 1,
70174 Stuttgart Germany**

உங்களை வரவேற்பதில் மகிழ்கின்றோம். தமிழ் மரபு அறக்கட்டளை, லிண்டன் அருங்காட்சியகம் மற்றும் ஜெர்மனி வாழ் தமிழ் அமைப்புக்கள். செய்தி முனைவர்.க.சுபாஷிணி (தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு)



# ஒரு புதிய புற்றுநோய் தடுப்பூசி

## நாம் எப்போதாவது புற்றுநோயைக் குணப்படுத்த முடியுமா?




Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

உலகில் வாழும் மனிதர்கள் இறப்பதற்கான காரணத்தில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கும் நோய் புற்றுநோய் ஆகும். வருடங்கள் போகப்போக இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு தான் போகிறது. விஞ்ஞானத்தின் உதவியுடன் மிக ஆபத்தான நோய்களை எல்லாம் அழிக்க அல்லது குணப்படுத்த முடிந்த நமக்குப் புற்றுநோயை எதிர்த்து நம்மால் வெல்லமுடியாத நிலையில் இருக்கிறோம். இருந்தாலும் விஞ்ஞானிகள் தொடர்ந்தும் புற்றுநோய்க்கான ஒரு தீர்வை நோக்கிச் செல்கிறார்கள். அசுயே தடுப்பூசி, புதிய சிகிச்சை முறைகள், ளஅயசவ னசரபள போன்ற பல விதமான முறைகளின் உதவியுடன் எதிர்காலத்தில் புற்றுநோயின் காரணத்தால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முயல்கின்றனர். இது தானா நாம் எல்லோரும் பல ஆண்டுகளாக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடிவு காலம்?

இதைப் பற்றித் தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு, புற்றுநோய் என்றால் என்ன? பொதுவாக நமது உடலில் காணப்படும் உயிரணுக்கள் பிரதி செய்யப்படும் போது அதில் காணப்படும் மரபணுவும் மாற்றமடையாமல் புதிதாக உருவாக்கப்படும் அந்த உயிரணுவில் காணப்படும். ஆனால் சில வேளைகளில் இவ்வாறு பிரதி செய்யும் போது அந்த மரபணுவில் ஒரு சில மாற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இது எல்லோரின் உடலில் காணப்படும் ஒரு சாதாரண நிகழ்வு ஆகும். பொதுவாக இந்தப் பழுதை நமது உடல் சரி செய்துவிடும். ஆனால் ஒரு சில வேளைகளில் இது சரி செய்யப்படாது. இதன் விளைவாக இப்படிப் பிழையாக உருவாக்கப்பட்ட ஒரு உயிரணுவிலிருந்து பிரதி செய்யப்படும் உயிரணுக்களும் அதே தவறான மரபணுக்களைக் கொண்டிருக்கும். இவற்றைத் தான் மருத்துவர் புற்றுநோய் உயிரணு என்று அழைக்கின்றனர். இதில் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால். ஒரு மனிதனின் வயது அதிகரித்துக்கொண்டு போகப் போக உடலில் உயிரணுக்களைச் சரி செய்யும் தன்மை குறைந்து கொண்டே போகும். இதன் விளைவாக முதியோர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும்.

இதில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. எல்லா புற்றுநோயும் ஒன்றில்லை. அவை உருவாகுவதற்கான மூலகாரணமும் வேறுபட்டிருக்கும். அதே நேரத்தில் அவற்றின் சிகிச்சைமுறையும் வேறுபட்டிருக்கும். உதாரணத்திற்குக் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான சிகிச்சை முறை நுரையீரல் புற்றுநோயின் சிகிச்சை முறையிலும் வேறுபட்டது.

சரி புற்றுநோய் பற்றி அறிந்தது போதும். இனி தற்போது உள்ள சிகிச்சை முறைகளைப் பற்றிப் பார்ப்போம். புற்றுநோயை தற்போது கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை போன்ற முறைகளுடன் குணப்படுத்த அல்லது புற்றுநோயாளியின் உயிர்வாழும் நாட்களை அதிகரிக்க முயல்வர். உதாரணத்திற்கு கீமோதெரபியின் உதவியுடன் புற்றுநோய் உயிரணுக்கள் பிரதி செய்வதைத் தடுக்க முடியும். அது நல்ல விஷயம் தான், ஆனால் இதன் மறு பக்கமாக நமது உடலில் காணப்படும் ஆரோக்கியமான உயிரணுக்கள் பிரதி செய்வதும் தடுக்கப்படும். இதனால் பல விதமான பக்கவிளைவுகள் ஏற்படும். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு பக்க விளைவு தான் முடி கொட்டுவது. கதிரியக்க சிகிச்சை ஊடாக புற்றுநோய் உயிரணுக்களுக்குச் சேதம் ஏற்படுத்த முயல்வர். இதில் உள்ள ஆபத்து புற்றுநோய் உயிரணுக்கள் மட்டுமில்லாமல் ஆரோக்கியமான உயிரணுக்களும் பாதிப்படைவது தான். தொடர்ந்து அறுவை சிகிச்சையின் உதவியுடன் ஒரு சில புற்றுநோய் உயிரணுக்களை மட்டுமே நீக்கி விடமுடியும். ஆக மொத்தத்தில் அனைத்து புற்றுநோய்களையும் நம்மால் குணப்படுத்த முடியவில்லை. எனவே இன்றைய விஞ்ஞானிகளின் நோக்கம் ஒன்று தான். ஒரே ஒரு சிகிச்சை முறையின் உதவியுடன் அனைத்து புற்றுநோய்களையும் குணப்படுத்துவதே ஆகும்.




இந்த வரிசையில் தற்போது ஒரு புதிய புற்றுநோய் தடுப்பூசி ஒன்றைப் பற்றிய ஒரு மருத்துவ ஆய்வொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தத் தடுப்பூசி மற்ற தடுப்பூசிகள் போன்று நோய் வருவதற்கு முன்பே பாதுகாப்பிற்குப் போடப்படும் ஊசி கிடையாது. இந்த தடுப்பூசி புற்றுநோய் வந்த பிறகு தான் போடப்படும். அதற்குக் காரணம் என்னவென்றால், இந்தத் தடுப்பூசியைத் தயாரிப்பதற்கு முதல், உடலில் எந்த விதமான புற்றுநோய் காணப்படுகிறது என்பதை நன்று அறிந்த பின் தான் முடியும். இந்தத் தடுப்பூசியின் செயல்முறை

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2022 ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main




Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



கவிதா லட்சுமி
(நோர்வே)






# தேவரடியார் சமூகத்தைச் சேர்ந்த நடனக் கலைஞர் பத்மஸ்ரீ முத்துக்கண்ணம்மாள்!

**2017** இல் கும்பகோணத்தில் வாழ்ந்துவரும் தேவரடியார்களான ஜீவரத்தனமாலா சகோரதரிகளைச் சந்தித்த பின் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றேன்.

தேவரடியார் சமூகத்தைச் சேர்ந்த நடனக்கலைஞரான முத்துக்கண்ணம்மாளோடு ஒரு நாள் பயணிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

விராலிமலையில் வசித்துவரும் முத்துக்கண்ணம்மாள் ஆறுமாதங்களுக்கு முன்பு பத்மஸ்ரீ விருதினைப் பெற்றமை பலரும் அறிந்ததே. பலர் அறியாத அல்லது பலரும் அறிந்து கொள்ளவிரும்பாத, கடந்து போகின்ற பல விடயங்களை கண்ணம்மாள் பகிர்ந்து கொண்டார்.





நானும் அவற்றை பிறிதொரு நாளில் விரிவாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

84 வயதினைக் கடந்துவிட்ட கண்ணம்மாள் இப்போதும் தான் கற்ற பல நடனங்களை நினைவு வைத்திருப்பது மட்டுமல்லாமல் அதை பலருக்கும் கற்றுக் கொடுப்பதில் பேரானந்தம் கொண்டிருக்கின்றார். அவரிடம் சில நடனங்களையும் சில பாடல் வடிவங்களையும் அறிந்து கொண்டதில் பெரு மகிழ்ச்சி.

விராலிமலையில் இருந்து சிறுதொலைவில் இருக்கும் மூவர் கோவிலுக்குச் சென்றோம். வெயில் அதிகம் என்றாலும் சளைக்காமல் தனது கம்பீரமான குரலிலும் கை அசைவுகளிலும் பல நடனங்களை ஆடிக்காட்டினார்.


'எல்லாரும் என்னிடம் படித்துவிட்டு மேடையில் ஆடும் போது ராகத்தை அடவுகளை மாற்றி விடுகின்றனர். நீ எதையும் மாற்றிவிடாது விராலிமலைப் பாடல்களை ஆடிக்காட்ட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். சரி அம்மா என்றேன்.

'சதிர்' என்பதும் 'பரதம்' என்பதும் வேறு

மீண்டும் எப்போது வருவாய் என்றார். வரும்போது என்னை மீண்டும் வந்து பார்க்க வேண்டும் என்றும் தொலைபேசியிற் பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆசீர்வதித்தார். எனக்கிருந்த சில சந்தேகங்களைக் கேட்டறிந்தேன். புதிய பல நடனம் சார்ந்த சொற்களையும் அறிந்து கொண்டேன். 'சதிர்' என்பதும் 'பரதம்' என்பதும் வேறு என்று அவர் நம்பும்படி செய்திருந்த காரணிகளையும் அவதானிக்க முடிந்தது. மனது பாரமானது.

விராலிமலைத் தேவரடியார் சமூகத்தின் கடைசி மனுஷியாக வாழும் முத்துக் கண்ணம்மாளைக் கண்ட உவகையும், அவர் மனச்சுமைகள் தந்த வலியையும் ஒருசேரப் பெற்ற பயணம், விராலிமலை.

விரிவான பதிவு விரைவில்.



## பொன்னியின் செல்வியும், செல்பியும்!

பொன்னியின் செல்வியில் படத்தில் வராத ஒரு காட்சி.குந்தவையும், நந்தினியும் எடுத்துக்கொண்ட செல்பி படம். என்னதான் இருந்தாலும் அரங்கத்திற்கு அப்பால் அவர்கள் திரிஷாவும் ஐஸ்வர்யராவும் தானே. எனக்குப் பிடித்த படம் இதற்கு ஏது எதிர்மறை விமர்சனம்.









# பாயோடு மக்களை ஒட்ட வைக்கும் அன்பு மந்திரம்

மட்டக்களப்பார் பாயோடு ஒட்ட வைத்து விடுவார் என்ற செய்தி இலங்கையில் பரவலாகப் பேசப்படும் செய்தி. அந்தப் பாய் எங்கே கிடைக்கும் என்று என்னிடம் பலர் விநயமாகக் கேட்டிருக்கின்றார்கள். பாய்க்கும் மட்டக்களப்புக்கும் என்ன தொடர்போ அதே தொடர்புதான் விருந்தோம்பலுக்கும் மட்டக்களப்பு மண்ணுக்கும் உரிய தொடர்பு. அடுத்தவரை வாழ வைக்கும் அற்புதமான மனப்பாங்கும் அம்மக்களுக்கு உண்டு என்பதை வந்தாரை வாழ வைக்கும் மட்டுநகர் என்ற வாக்கியம் பறைசாற்றும். அக்காலத்தில் மலையகச் சிறுவர்களை வீட்டு வேலை செய்வதற்காக அழைத்து வரும் வழக்கம் இருந்தது.

எனது தந்தையும் கல்குடா தொகுதி அமைச்சர் தேவநாயகம் அவர்களும் மரியதாஸ் என்னும் பொறியியலாளரும் இணைந்து புணானைக் குடியேற்றம் செய்த காலப் பகுதியில் அம்மக்கள் மேல் இரக்கம் கொண்ட தந்தை, எங்கள் வீட்டில் ஒரு பையனையும் ஒரு பெண்ணையும் வேலைக்காக அமர்த்தியிருந்தார். அப்பெண்ணுக்கு நகை போட்டுதன்னுடைய தையற்கலைச்சிறப்பையெல்லாம் அவளுடைய ஆடையிலும் அம்மா காட்டுவதை நான் அறிந்திருக்கின்றேன். அதேபோல் ஒரு ஆண்பிள்ளைப் பிள்ளை இப்படி வீட்டு வேலை செய்வது சரியில்லை என்று கூறி அப்பையனை வேலை முடிந்து வீட்டில் இருக்கின்ற சமயத்தில் சைக்கிள் திருத்துகின்ற கடைக்கு அனுப்பி அவனுடைய எதிர்காலம் பற்றி சிந்தித்த என்னுடைய தாய் வந்தாரை வாழ வைக்கும் மட்டக்களப்பு என்பதற்கு என் அநுபவ முன்னுதாரணமாக இருந்தார்.

வியாபார நிமித்தமாகவும், உத்தியோக நிமித்தமாகவும் மட்டக்களப்பு மண்ணில் வாசம் செய்ய வருவோர். அங்கு நிரந்தர குடிகளாக மாறி அங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து மட்டக்களப்பு மக்களாகவே வாழ்ந்து வருவது கண்கூடு.

இந்த மட்டக்களப்பார் யாழ்ப்பாண மாப்பிள்ளைகளை எல்லாம் பாயோட ஒட்ட வைத்து வளைத்துப் போட்டு விடுவார்கள் என்னும் பேச்சு இன்றும் பேசப்படுகின்றது. அந்த மந்திரக்கலையை இன்னும் இலங்கை மண்ணில் வேறு எந்தப் பகுதி மக்களும் கற்கவில்லை



என்பது ஆச்சரியமான ஒரு விடயமாக ஒருபுறமிருக்க இலங்கை முன்னாள் பிரதம மந்திரி விஜேயானந்த தஹாநாயக்கா அவர்கள் குறுமண்வெளிப் பெண்களுக்கு ஈடான அழகுடைய பெண்கள் எங்குமே இல்லை என்று பாராட்டியுள்ளார். ஒட்ட வைக்க அழகு ஒரு புறமிருக்க கொஞ்சு தமிழ் கவியோசை அவர்தம் குரலிலே இருக்கும் என்பதற்கு நாட்டுப் பாடல்களும் பேச்சுவழக்கும் முன்னின்று கையுயர்த்தும். அடுத்து அறுசுவையுடன் மட்டக்களப்பு வாவியின் மீன் கடல் உணவுகளும் கால்நடைகளும் போட்டி போட்டு உணவுக்குள் அமர்ந்து கொள்ள அன்பும் அறனும் கலந்து இனிமையாகப் பேசி உண்ட உணவு உடலில் சேர பரிமாறுகின்ற அழகே தனி அழகு. இத்தனை சிறப்பும் கற்றுக் கொண்டால், இலங்கையின் எந்தப் பகுதி மக்களும் பாயோடு மக்களை ஒட்ட வைக்க முடியும். ஏலாதி என்னும் நூல்

**இன்சொல், அளாவல், இடம்,**
**இனிது ஊண் யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து**
**வகுப்பானேல் – மென்சொல்**
**முருந்து ஏய்க்கும் முட்போல்**
**எயிற்றினாய்! நாளும்**
**விருந்து ஏற்போர் விண்ணோர்**
**விரைந்து**

என்று கூறுகிறது. அதேபோல் வீட்டிற்கு வரும் விருந்தினரைப பார்த்து நீங்கள் முன்னமே சொல்லியிருந்தால் சமைத்திருப்போமே, நீங்கள் கோப்பி குடித்துவிட்டு வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன், கோப்பி போடட்டுமா என்ற கேள்விகள் மூலம் பசியோடு வருகின்ற விருந்தினரின் பசியைப் பேச்சால் போக்காது, நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது என்று புகழ்தலும், முக மலர்ச்சியோடு நோக்குதலும், வருக என்று வரவேற்றலும், கண்டவுடன் எழுந்து நிற்றலும், இனிமையாகப் பேசுதலும், அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சியைக் கூறுதல், வந்தவுடன் பக்கத்திலே ஆசையுடன் அமர்ந்து கொள்வது, அவர்கள் வீட்டை விட்டுச் செல்லுகின்ற போது அவரோடு சேர்ந்து சென்று வழி அனுப்பி வைப்பது என ஒன்பது பண்புகள் விருந்தினரைப் பேணலுக்கு இருக்கின்றன என்று விவேகசிந்தாமணி எடுத்துக்காட்டுகின்றது.

**அசோக வனத்தில் சீதை**
**சிறையிருந்த போது**

**அருந்து மெல்லடகு ஆரிட**
**அருந்துமென் றழுங்கும்**
**விருந்து கண்டபோது என்னுறுமோ**
**என்று விம்மும்**
**மருந்தும் உண்டு கொல்**
**யான்கொண்ட நோய்க்கென்று**
**மயங்கும்**
**இருந்த மாநிலம் செல்லரித்திடவு**
**மாண்டெழுதால்**

என கம்பர் விருந்தினர் வந்தால், இராமன் தான் இல்லாமல் என்ன செய்வானோ என்று வருந்துவதாக எழுதியிருக்கின்றார்.

கணவனும் மனைவியும் இணைந்தே விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்பது சங்கமருவிய காலத்திலிருந்தே வழக்கத்தில் இருந்தது. அதனாலேயே அந்தணர்க்கு மாம்பழம் உண்ணக் கொடுத்த செய்தியைக் காரைக்காலம்மையார் தன்னுடைய கணவனுக்கு மறைத்தார். கோவலன் மாதவியுடன் வாழ்ந்த காலத்தில் கண்ணகி விருந்தோம்பலை மறந்திருந்தாள் என்பதை

**“அறவோர்க் களித்தலும்**
**அந்தணரோம்பலும்**
**துறவோர்க் கெளிர்தலும்**
**தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் காடலும் இழந்த**
**என்னை”**

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அமெரிக்கர்களோ பேய்களுக்காக ஒரு திருவிழாவையே கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்

நாமெல்லாம் கடவுள்களுக்காக விழா எடுப்போம், திருவிழா கொண்டாடுவோம். ஆனால் அமெரிக்கர்களோ பேய்களுக்காக ஒரு திருவிழாவையே கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். அதுதான் ஹாலோவீன் ! பேய்களைப் பற்றிய பயம் உலகெங்கும் உள்ளது. இறந்து போனவர்களின் ஆன்மாக்கள், திருப்தியடையாமல் உலவிவந்தால், அவை மனிதர்களைத் தாக்கும் என்ற நம்பிக்கை, எல்லா நாடுகளிலும் எல்லா மனிதர்களிடையேயும் இருந்துவருகிறது. இனம், மொழி, நாடு, படித்தவர், படிக்காதவர் என எந்த வித்தியாசமும் இன்றி பேய்களைப் பற்றிய பயம் இருந்துவருகிறது.அந்தவகையில், ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 31 ஹாலோவீன் தினமாக அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அயர்லாந்து உள்ளிட்ட நாடுகள் கொண்டாடி வருகின்றன.

பேய்களை விழா கொண்டாடி மகிழ்வைத்தால், தங்களுக்கு எந்த விதமான கெட்டதையும் அவை செய்யாது என்பது மேற்கத்தியவர்களின் நம்பிக்கை. முதன்முதலில் இந்தப் பேய்களின் தினம் அயர்லாந்தில் அகாலமாக உயிர் நீத்த புனிதத் துறவிகளின் நினைவாகவே ரோமன் கத்தோலிக்கர்களால் பிப்ரவரி 21,மே13 திகதிகளில் கொண்டாடப்பட்டது. பின்னர், அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்களால் இந்நாள் அக்டோபர் 31-ம் தேதியானது.

பூச்சாண்டிகள் தினம் என்று வர்ணிக்கப்படும் இந்த நாளில், ஆரம்பத்தில் உருளைக் கிழங்கை வெட்டி, அதன் உள்ளே மெழுகுவர்த்தியை வைத்து, மந்திரித்து, பேய்களை விரட்டினர். பின்னர், பெரிய பரங்கிக் காய்களை வெட்டி, பயங்கரமாக அலங்கரித்து, அதை வீட்டுக்கு வெளியே

**மூட நம்பிக்கைகளுக்கு நாம் மட்டும்தான் சொந்தக்காரர் என்று இனி எவரும் மார்பு தட்டவேண்டாம்.**

வைத்துப் பேய்களைத் துரத்த ஆரம்பித்தனர். காலவோட்டத்தில் ,இந்த ஹாலோவீன் தினம் பயங்கரமான கற்பனை திறன்களால் காய்ந்த சருகுகள், எலும்புக்கூடுகள், சூனியக்கார பொம்மைகள், பிரமாண்ட சிலந்திகள், ஓநாய் பொம்மைகள் எனப் பலவிதமான உருவங்களைக்கொண்டு படுதிகிலாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.




அமெரிக்காவின் 16 மாநிலங்களிலும் உள்ள ஹாலோவீன் அருங்காட்சியகங்களில் உள்ள உருவங்கள், இந்த நாளில் வீதிகளில் உலா வரத்தொடங்கிவிடுமாம். இந்த நாளின் இரவு முழுக்க விதவிதமான பேய்களின் அலங்கார அணிவகுப்புகள், காண்பவரை மிரளச்செய்யும். பேய்களின் முகமூடியை அணிந்து கொள்ளும் இளைஞர், யுவதிகள் சாலையெங்கும் திரிந்து பீதியைக் கிளம்புவைத்து மட்டுமன்றி, இன்றெல்லாம் சிறுவர்கள் ரசிக்கும் கார்ட்டூன்களில்கூட இந்த ஹாலோவீன் அதிகப்படியாக காட்டப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது .



பிரியா இராமநாதன்
(இலங்கை)

இந்த நாளானது ஆரஞ்சு வண்ணத்துக்கும் மற்றும் கருமை நிறத்துக்கும் தொடர்புபட்ட நாளாகக் கருதப்படுகிறது.

மற்றவர்களை பயமுறுத்தி விளையாடுவது, பலவிதமான மாறுவேடங்கள் அணிவது, மாறுவேட விருந்துகளில் கலந்து கொள்வது, சொக்கப்பனை கொளுத்துவது, பயமுறுத்தும் கதைகளைப் படிப்பது, பயமுறுத்தும் படங்களைப் பார்ப்பது ஆகியவை இந்த கொண்டாட்ட நாளில் இடம்பெறும். (இதனாலேயே பல பேய்ப் படங்கள் ஆலோவீன் விடுமுறை நாட்களுக்கு முன்பாக வெளியிடப்படுகின்றனவாம்)

திருமணம் ஆகாத பெண்கள் ஒரு இருட்டான அறையில் ஆலோவீன் வெளிச்சத்தில் உட்கார்ந்து கண்ணாடியைப் பார்த்தால் எதிர்கால கணவனின் உருவம் கண்ணாடியில் தெரியும் என்றும் திருமணத்திற்கு முன்பாக வருங்கால கணவன் இறக்க நேரிடின் ஒரு மண்டையோடு கண்ணாடியில் தோன்றும் என்பதும் அமெரிக்கர்கள் பலரது பழங்கால நம்பிக்கைகளில் ஒன்று .

“கேல்“ நாகரிகத்தின் அறுவடைக் காலங்களில் உருவானதாக நம்பப்படும் இந்தவிழா, அறுவடை செய்து வைத்திருக்கும் பொருட்களை பேய்கள் அழித்து விடாமல் இருப்பதற்காக பாரம்பரியமாக கொண்டாடப் பட்டதாக கூறப்படுகின்றது. அறுவடை செய்த பொருட்களை குவித்து வைத்து பக்கத்திலேயே சிறிய அளவில் நெரு ப்பு மூட்டி வைத்து பேய்கள், பிசாசுகள், சூனியக்காரிகள் போல பலரும் வேடமணிந்துக்கொண்டு அன்றைய நாளில் தங்களது முன்னோர்களின் ஆவிகளுக்கு மரியாதை செய்வதோடு தீங்கிழைக்கும் பிற ஆவிகளை துரத்துவதையும் மேற்கொள்கின்றனர்.( தீய ஆவிகளில் இருந்து தங்களைப் பாதுகாக்கும் அடையாளமாக தாங்களும் அது போன்ற முகமூடிகளையும் ஆடைகளையும் அந்நாளில் அணிந்து கொள்வதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்) .

எரிகின்ற நெருப்பில் அகற்றப்படவேண்டிய பொருட்கள் இடப்படுகின்றன. பல்வேறு வகையான ஆடைகளும் மூகமூடிகளும் கெட்ட ஆவிகள் செய்வதைப் போல கிழிக்கப்படுகின்றன. அல்லது அவ்வாறு செய்வதன் மூலம் கெட்ட ஆவிகள் சமாதானமடைவதாக நம்பினர் பலர். மூட நம்பிக்கைகளுக்கு நாம் மட்டும்தான் சொந்தக்காரர் என்று இனி எவரும் மார்புதட்டவேண்டாம்.

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com



finma : 34598 cicero : 25605

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







# ஜேர்மனியில் நாளைய மாற்றம் திரைப்படத் தோடக்க விழா












ஜேர்மனியில் பல குறும்படங்களை இயக்கித் தயாரித்தவரும், நாளைய நாம் எனும் தொடர் நாடகத்தைத் தயாரித்து வெளியிட்டவருமாகிய சிபோஜி சிவகுமாரன் அவர்களின் இயக்கத்தில் உருவாகவிருக்கும் நாளைய மாற்றம் எனும் முழுநீளத் திரைப்படத்திற்கான பூஜை 24.09.22 அன்று, மாலை ஐந்து மணியளவில், ஜேர்மனி கம் காமாட்சி அம்பாள் ஆலயத்தின் முன்றலில் பொங்கலிடப்பட்டும்,மங்கல விளக்கேற்றலுடனும் பிரதம குருக்கள் பிரம்மசிறி பாஸ்கரக்கரக்குருக்கள் அவர்களினால் பூஜை போடப்பட்டு தொடக்கி வைக்கப்பட்டது.

இப்படப் பூஜையில் இப்படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவராகிய பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாலசிசிங்கம், நாடக,குறும்பட திரைப்பட நடிகருமாகிய தயாநிதி தம்பையா,நாடக குறும்பட நடிகராகிய அருண்மொழித் தேவன் ஆகியோருடன் நாளைய நாமில் நடித்த ஏலையா க.முருகதாசன்,திருமதி.அன்னபூபதி குமாரசாமி,பொன். ரமா, திலக், ரவின், திருமதி. விக்கி.நாதன்,திருமதி.மயில்விழி,பிரபாகரன்,திருமதி.செல்வி.இரஞ்சன்,ரம்ஜித், ரம்ஜிகா,திருமதி யோகராஜா,சாந்தினி, பிராங்பேர்ட் நந்தன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாளைய மாற்றம் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கும் திலக் அவர்களினால் கிளாப் அடித்து படப்பிடிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து கம் காமாட்சி அம்பாள் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் தேநீர் விருந்தும், இரவு விருந்து பசாரமும் இடம்பெற்றதுடன் நாளைய நாம் நாடகத்தில் நடித்த நடிகர்களுக்கு இயக்குநர் சிபோஜி சிவகுமாரனால் சான்றிதழ்கள் அளித்து மதிப்பளிக்கப்பட்டதுடன் இவ்விழாவில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் பாலசிங்கம்,அருண்மொழித்தேவன், தயாநிதி.தம்பையா,ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இயக்குநர் உரையாற்றும் போது நாளைய நாம் தொடர் நாடகத்தில் நடித்த நடிகர்களும் நாளைய மாற்றம் திரைப்படத்திலும் நடிப்பார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.கலந்துரையாடலுடன் இவ்விழா நிறைவு பெற்றது.தங்கராஜா அவர்களும் இப்படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏலையா க.முருகதாசன் (ஜேர்மனி)




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# “அப்துல் ஹமீத் வழிப்போக்கன் அல்ல வழிகாட்டி”

## ஜோக்கிம் இருதயானந்தன்:

1967ஆம் ஆண்டில் இலங்கை வானொலி தமிழ்ச்சேவைக்குத் தெரிவான ஐந்து அறிவிப்பாளர்கள் ஜோக்கிம் இருதயானந்தன், ஜோக்கிம் / பெர்னாண்டோ,ராஜேஸ்வரி சண்முகம், சி.நடராஜசிவம், பி.எச்.அப்துல் ஹமீத் ஆகியோர் வரிசையில் இடம்பிடித்த பிரிட்டனில் வாழ்ந்துவரும் ஜோக்கிம் இருதயானந்தன் தமக்கு சானா சண்முகநாதன் பயிற்சி வழங்கியதையும், ஒலிபரப்பில் அறிவிப்பாளர்கள் கவனிக்க வேண்டியவை என்ன என்பவை பற்றியும் எடுத்துக்கூறியவர் ஹமீத் அவர்கள் போல் ஒலிபரப்புத் துறையில் தானும் இயங்கிக் கொண்டிருப்பதையும் எடுத்துக்கூறினார்.

## யசோதா மயில்வாகனன்:





கே.ஜே.ஜேசுதாஸ் அவர்கள் அன்றைய குட்டிப்பாப்பா பாடகி சுஜாதா வர்களோடு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து யாழ்.திறந்தவெளி அரங்கில் இசைவிருந்து வழங்கினார்.அவ்வேளை பதிவான நிழல் படம்.
இடமிருந்து வலமாக: சிம்மக்குரலோன்– அன்பு அறிவிப்பாளர் பீ.எச்.அப்–துல்ஹமீட் அவர்கள், காந்தர்வக்குரலோன் கே.ஜே.ஜேசுதாஸ் அவர்கள், எஸ்.கே.ராஜென், மதுரக்குரலோன் அமரர் கே.எஸ்.ராஜா அவர்கள், பாடகர் ஸ்ரனி சிவானந்தன் அவர்கள்

அப்பா றேடியோ சிலோன் எஸ்.பி.மயில் வாகனன், அம்மா செந்தில்மணி. அம்மாவின் குரலை வானொலியில் கேட்டு அவரைக் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டார் எனக் கூறி சபையோரின் ஆரவாரமான கரவொலியைப் பெற்றார் யசோதா மயில் வாகனன்.றேடியோ சிலோனைச்சேர்ந்த பல இளைய அறிவிப்பாளர்கள் வீட்டுக்கு வருவார்கள். அப்துல் ஹமீத், நடராஜசிவம் ஆகியோர் வீட்டுக்கு வந்தமை நினைவில் இருக்கிறது.அப்பாவின் பெயரால் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி எனக் கூறினார்.

## என்.செல்வராஜா:

அரைநூற்றாண்டு கால ஒலிபரப்பு வரலாற்றைப்பதிவு செய்திருப்பதை மிக விரிவாக எடுத்துக்கூறிய நூலகவியலாளர் என். செல்வராஜா இந்நூலை எழுத முழுமையான தகுதி பெற்றவர் என்றார்.அரங்க அளிக்கைகளில் அப்துல் ஹமீத் வகிபாகத்தை பேராசிரியர் க.சிவத்தம்பி அவர்கள் பதிவு செய்ததை எடுத்துரைத்தார்.

## கோவிலூர் செல்வராஜன்:

70கள் 80கள் எங்கள் பொற்காலம் என தமது கவிவரிகளால் கோவிலூர் செல்வராஜன் வாழ்த்தினார்.தப்பில்லாத் தமிழ்தனைப் பேசி தனித்துவக்குரலால் தமிழுடன் வாழும் அப்துல் ஹமீதை அரங்கிற்கு வராமல் கோவிலூர் செல்வராஜன் குரல்வாயிலாக வாழ்த்தினார் புலவர் நல்ல தம்பி சிவநாதன்.

## எம்.என்.எம்.அனஸ்:

அழகுறத் தமிழ் பேசவேண்டும் என்பதை அப்துல் ஹமீத் அவர்கள் செல்லுமிடமெங்கும் கூறிவருவதை எடுத்துரைத்த எம்.என்.எம்.அனஸ் இன்றைய வானொலி ஒலிபரப்பின் தன்மையைத் தெரிவித்து இலங்கை வானொலி மாணவர் மன்ற நிகழ்ச்சி அனுபவத்தை எடுத்துக்கூறினார்.

## பேராசிரியர் மு.நித்தியானந்தன்:

தமிழர்களின் வாழ்வியலின் அங்கமாகிவிட்டார் அப்துல் ஹமீத். அவர் வழிப்போக்கன் அல்ல! அப்துல் ஹமீத் வானொலித் துறை வழிகாட்டி என பேராசிரியர் மு.நித்தியானந்தன் எடுத்துரைத்தார். தமிழர்களின் வாழ்வில் தடம்பதித்த பெருமகனாகவே அப்துல் ஹமீத் இந்த நூலில் தோற்றம் பெறுகிறார் என பேராசிரியர் மு.நித்தியானந்தன் மிகச் சிறப்பாக நூல் ஆய்வை வழங்கியிருந்தார்.

## பி.எச்.அப்துல் ஹமீத்:

வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தேர்தலுக்கு அஞ்சும் ரணில்?

அவை காரணமாகவிருந்துள்ளது. ஆனால், சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ள விலைவாசியை, தமது வழமையான மாத வருமானத்துடன் சமாளிக்க முடியாமல் பல குடும்பங்கள் வறுமையின் எல்லைக்குச் சென்றுவிட்டன. இந்த நிலை இன்னும் மோசமடையலாம் என பொருளாதார நிணர்கள் எச்சரிக் கின்றார்கள். இது ரணிலுக்கும் தெரிகிறது.

தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான தருணம் இதுவல்ல என ரணில் கருதுவதற்கு இதுவும் காரணம். இந்த வேளையில் தேர்தல்களை நடத்துவது முகத்தில் சேறை அப்பிக் கொள்வதற்கு சமன். மக்கள் தமது சீற்றத்தை தன்மீது காட்டுவார்கள் என அவர் அஞ்சுகிறார். அதனால்தான், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தொகையை அரைவாசியாகக் குறைக்கப்போவதாகவும், தேர்ல் சட்டத்தை மாற்றப்போவதாகவும் ரணில் கடந்த வாரம் அறிவித்திருக்கின்றார் இதனைக்காரணமாகச் சொல்லி உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களையும் ஒத்திவைப்பதுதான் ரணியின் உபாயம். மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தள்ளிப்போடுவதற்கு கையாண்டது போன்ற ஒரு உபாயத்தை இங்கு ரணில் பயன்படுத்தியுள்ளார்.


பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள மொட்டு அணியும் இதனை ஆதரிக்கும். ராஜபக்ஷக்கள் மீதான மக்களின் சீற்றம் இன்னும் முற்றாகத் தணியாத நிலையில் மீண்டும் மக்கள் முன்பாகச் செல்வதற்கு மொட்டுவும் தயாராகவில்லை. ஆக, பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் தான் நினைத்ததை சாதித்துவிட முடியும் என ரணில் எதிர்பார்க்கின்றார். பிரதிபலிப்புக்கள் எவ்வாறுள்ளது என்பதை அறிவதற்காகவும் இந்த அறிப்பை ரணில் வெளியிட்டிருக்கலாம்.

இந்த நிலையில் விழித்துக்கொண்டுள்ள எதிர்க்கட்சிகளால் தேர்தல்களை நடத்துவதற்கான அழுத்தங்களை கொடுக்கப்போவதாக அறிவித்துள்ளன. பிரதான எதிர்க் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் என்பன இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டுக்காக இணைந்து களமிறங்கப்போவதாக அறிவித்துள்ளன. போராட்டங்களை ஒடுக்குவதற்கான சில உபாயங்களையும் கடந்த சில வாரங்களில் ரணில் பரீட்சித் துப்பார்த்துள்ளார் இந்த நிலையில், உள்ளூராட்சி தேர்தல்களை மையப்படுத்திய தான ஒரு பலப் பரீட்சையை அடுத்துவரும் வாரங்களில் எதிர்பார்க்கமுடியும்!





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.






# பொன்னியின் செல்வனின் நறுமணமே நாசியை விட்டு அகலவில்லையே!

Airpor Duty Free fil topa perfume வாங்கப் போனா, ஒரு sample இற்கு அதை மணக்க ஒரு குட்டி கடுதாசியில் per fume l spray பண்ணி மணக்கத் தருவாங்கள். ஒன்றிரண்டு perfume மணந்ததும், மூன்றாவதை மணக்க முதல், முதலிரண்டின் மணத்தையும் மறக்கடிக்க ஒரு கோப்பிக் கொட்டையை மணக்கத் தருவாங்கள். அப்பத் தான் மூன்றாவதாக மணப்பது கசநளா ஆக இருக்கும்.

பொன்னியின் செல்வன் முதல் நாளே இரண்டு தரம் பார்த்தாச்சு, முதலாம் முறை காலம்பறயே தனிய போய் முதல் ஷோவும், இரண்டாம் தரம் மனிசியோடு போய் imax இல் பின்னேரக் காட்சியும் பார்த்து மகிழ்ந் தாச்சு.

பொன்னியின் செல்வனில் பணியாற்றிய தொழில்நுட்ப கலைஞர்களின் பேட்டிகளை பார்க்கும் போது, அடடா அதை கவனிக்காமல் விட்டிட்டோமே. ஐயோ இதை ரசிக்காமல் விட்டிட்டோமே என்ற ஏக்கம் தலை தூக்கி, படத்தை மூன்றாம் முறை பார்க்க வைக்கும் போலிருக்கிறது.

குறிப்பாக ஒளிப்பதிவாளர் ரவிவர்மன், இந்தப் படத்தின் காட்சிகள் வெளியில் இருந்து எடுக்கப்படவில்லை, காட்சி நடக் கும் இடத்திற்குள் இருந்து, உள்ளிருந்தே எடுக்கப்பட்டன என்று கூறியிருப்பது, படத் தை மீண்டும் ஒரு முறை பார்க்கத் தூண்டுகிறது. கமராவை தோளில் தூக்கிக் கொண்டு போய், போர்க்கள காட்சிகளை யும், பொன்னி நதி பாடல் காட்சியையும் ரவிவர்மன் காட்சிபடுத்தும் மேக்கிங் வீடி யோக்கள், மூன்றாம் முறை பார்க்கும் ஆர்வத்தை அதிகரித்திருக்கிறது. அதை விட, தோட்டா தரணியின் செவ்வி, sound specialist ஆனந் கிருஷ்ணமூர்த்தியின் பேட்டியும், முதலிரு முறை கவனியாமல் தவற விட்ட விடயங்களை சுட்டிக் காட்டி நிற்கின்றன.

ஆனா என்ன பிரச்சினை என்றால், முதலிரு முறை பார்த்த பொன் னியின் செல்வனின் நறுமணமே நாசியை விட்டு நகராமல் இருக்கும் perfume போல இருக்க, அதை மறக்கடிக்க பார்க்க வேண்டிய அந்த கோப் பிக் கொட்டை படம் எதுவாக இருக்கும்?



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

# சட்ட பூர்வமான கல்விச் சான்றிதழ்களும், நமது தொழில் முன்னேற்றங்களும்!




தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து வாசிக்கும் நாம் வசிக்கும் அந்த அந்த நாடுகளில் உள்ள சட்ட திட்டங்க ளுக்கு அமையவே தொழில் செய்கின் றோம். யேர்மனியில் ஆரம்பகாலத்தில் 1977 களில் வந்தவர்கள் மொழியறிவு பெற்று, யேர்மனியர்களுக்கு ஈடான தொழில்களில் ஈடுபட முடியவில்ல. ஆனால் இன்று அந்த நிலமை இல்லை. இன்றைய சந்ததியினர் யேர்மன் மொழியினை தாரளமாக பேச, எழுதக்கூடியவர்களாக உள்ளனர். காப்புறுதி, வங்கிக்கடன், வீடுவிற்பனை முகவர்கள் என பலதுறையிலும், அவர்களுக்கு உள்ள தனித் திறமை, அனுபவங்கள், இவற்றை வைத்து இத்தொழிலை சிறப்பாகச் செய்கின்றனர். இருந்தாலும் சட்டதிட்டங்களுக்கு அமைய தமது துறையை மேம்படுத்தினால் மட்டுமே உயர்ச்சியடைய முடியும்.

இக்கல்விகள் சம்மந்தமாக அவற்றுடன் தொடர்புடைய இளைஞன் கமலநாதன். சுகன் அவர்களை நேர்கண்டபொழுதில் அவர் தந்த சில செய்திகளை இங்கு பதிவு செய்கின்றேன். Kaufmann /Kauffrau für Versicherungen und Finanzen (seit 01.08.2006 umbenannt ) மேற் படி கல்வியை சட்டபூர்வமாக கற்று சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகளை, அதற்கான வசதிகளை தாம் செய்துகொடு க்க தயாராக உள்ளதாக தெரிவித்தார். எமது ஆசை இத்தொழிலில் ஈடுபடும் ஒவ்வொ ருவரும்,சரியாகவும், நேர்த்தியாகவும், இத்தொழில் புரிவதற்கான சட்ட அங்கிகாரம் (IHK) உடையவராக வேண்டும் என்பதே.

2004ம் ஆண்டு முதல் 2007 வரை DEBEKA Versicherungskaufmann மூன்று வருடங்கள் கற்று சான்றிதழ் பெற்ற நீங்கள், இன்றுவரை Versicherungs makler கடமை புரிகிறீர்கள். இத்துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?

முதலில் இத்துறையில் கல்வி கற்க A/L (Abitur) பரீட்சையில் சித்திபெற முயன்றதைச்சொல்லலாம். அடுத்து தாய் நாடக இருந்தாலும், இங்காக இருந் தாலும் பெரிதும் ஈடுபடாத ஒரு துறையாக அன்று இருந்தது,அதனால் அத்துறைக ளில் அனுபவம் உடைய நம்மவர்கள் யேர் மனியில் அரிதாகவே இருந்தனர். அதனால் இத்துறையில் மேலதிக கல்வி யை எமது சுயமுயற்சி மூலம் இங்கேதான் கற்க முடிந்தது. ஆங்கிலம் பேசும் நாடுக ளில், எமது மக்களுக்கு போதிய மொழி அறிவு இருந்துருக்கும், யேர்மனியில் மொழி யோடும் போராடியே அன்று நம்மவர்கள் முன்னேறினார்கள் என்பதை இச்சந்தர்ப்ப த்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். என்றார்.

இத்துறையில் நீங்கள் மட்டும்தான் கற்று யேர்மனியில் தொழில் புரிகிறீர்கள்? காரணம் பல இளையவர்கள் இதனை செய்வதால் இக்கேள்வி இங்கு அவசிய மாகிறது. பலர் கற்று தொழில் புரிகிறார்கள் என்பது மறுப்பதற்கு இல்லை, ஆனால் அவர்களில் பல மாதச் சம்பளத்தில் ஒரு நிறுவனத்தில் வேலை செய்வதால், அங்கு தமது சுயமுயற்சியால் தனிப்பட்ட முறையில் தங்களை உயர்த்திட முடிவதில்லை. அதற் கான சுதந்திரமும் அங்கில்லை.

இத்துறையில் Versicherungsmakler அவை Erlaubnis nach § 34d Abs. 1 GewO நான் கற்று தனிப்பட்ட முறையில் வேலை செய்பவன் என்பதில் எனக்கு பெருமகிழ்வும், திருப்தியும் உண்டு. பலர் இவற்றை கற்று இருந்தாலும், சுய தொழிலாக செய்வது குறைவு என்றே நான் கருதுகி றேன். எனது தரவுகளில் தவறு இருந்தால் அதற்கான பதிலை என்னுடன் நேர்கொண்டு பெறலாம். தொடர்பு இலக்கம் கீழே தரப்படுகி ன்றது. இந்த இளைஞனின் ஊக்கம் உச்சம் பெற வாழ்த்துவோம்.

**தொடர்பு இலக்கம்: (49) 0179 7190138**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மணிவிழாக்காணும் அறிவிப்பாளர்
# சகநாயகன் சி.சக்திவேல்





எமக்கு மிகச் சிறந்த உறவுகள், வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டங்களிலும் வந்து போகும். இது எல்லோருடைய வாழ்விலும் ஏதோ ஒரு காலத்தில் நிகழ்வதாக இருக்கும். ஆனால் சில உறவுகள் மட்டும் வாழ்க்கையில் நெடும் தூரம் இணைந்தே பயணிக்கும்.

அப்படி இணைந்தே எம்முடனும், வெற்றிமணியுடனும் பயணிக்கும் ஒரு உறவே இன்று மணிவிழாக்காணும் சகநாயகன் சி.சக்திவேல் அவர்களுக்கும், எமக்குமான உவுறவு.

ஒரு அறிவிப்பாளராக அவரை 1984ம் ஆண்டு அல்ரனா லூடின்சைட் தமிழர் விளையாட்டு கழகத்தின் விழாவில் கண்டேன்.

எமக்கு ஒருவரை பிடிக்கவேண்டும் என்றால் அவரைப்பற்றி பல விடயங்கள் அறிந்து, அதன் சிறப்பால் அவர் மீது ஒரு ஈர்ப்பு வரும். ஆனால் அவரைக் கண்டதும், ஏதும் அறியாமலே ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது என்பதுதான் இங்கு உண்மை.இது காதலர்களுக்கு மட்டுமல்ல கலைஞர்களுக்கும் ஏற்படும்.

அதன் பின்புதான் அவரை உன்னிப்பாகக் கவனித்தேன். அவர் அறிவிப்பாளராக வெற்றிமணியுடன் பயணிக்க எமக்கு ஏற்றவர் சிறந்தவர் என்ற முடிவுக்கும் வந்தேன். யேர்மனியில் பல திறமையான அறிவிப்பாளர்கள் இருந்தாலும், சக்திவேல் அவர்கள் எனக்கு அருகில் இருந்து,



என்னைப் புரிந்துகொண்டு ஒரு விழாவை தனது விழாவாக கருதி அறிவித்தலுக்கு தேவையான முழுச்சேகரிப்பையும், என்னிடம் இடைவிடாது கேட்டு பெற்றுக்கொள்வார். யேர்மனியில் வெற்றிமணி முதலாவது ஆண்டு விழா 1995 ம் ஆண்டு கொண்டாட்டத்தில் ஆரம்பித்த பயணம் வெள்ளிவிழாக் கடந்தும் தொடர்கிறது.

ஆரம்பத்தில் நமது பிரபல அறிவிப்பாளர் அப்துல் கமீத்போல் தனது அறிவிப்புக்களை தொடர்ந்தார்.

காலப்போக்கில் தான் யார் என்பதை தனக்குள் தேடிக் கண்டு கொண்டார்.

வெற்றிமணி அத்தேடலுக்கு வழி சமைத்தது. ஒருவரது அறிவித்தல் பாணியினை மாற்றுவது கடினம். ஆனால் விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வு கொண்டவர்கள் தமது பாணியினை சரியான இடத்தில் தம்மை மாற்றி மேம்படுத்த முடியும்.

இன்று தனக்கென ஒரு பாணியமைத்து, தனக்கு தேவையான தகவல் களஞ்சியத்தை செல்லும் இடம் எல்லாம் சேகரித்து, தன்னை அத்துறையில் வளர்த்து வருகிறார். சகநாயகன் என்ற பட்டம் 2008ம் ஆண்டு வெற்றிமணி விழாவில் யாழ் பல்கலைக்கழகப் பொறியியலாளர் சி.தயாபரன் அவர்களால் அன்று வழங்கப்பெற்றது.

ஒரு கலைஞன் வெற்றி பெற வேண்டும் என்றால் அவர்களுக்கு பின்னால் யார் நிற்கிறார்களோ இல்லையோ! அவர் மனைவி நிற்பார்.அப்படி இல்லை என்றால் அவர்களது வெற்றி நிரந்தரமாகாது. அவர் ஜெயம் பல பெற துணையாக இருக்கும் அவர் மனைவி ஜெயமாலா (ஜெயா) அவர்களது ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுக்குரியது.

என்ன, விழா! அதற்கு எந்த உடை என்பது முதல், உணவு வரை அவர் கைப்பக்குவமே என்றால் மிகையாகாது.




அவரது விருப்புகளுக்கு இடையூறு செய்யாது தட்டிக்கொடுக்கும், மகள் அபிராமி,மகன் பிரணவன் ஆகியோர் பலமாக உள்ளனர்.

இப்படி ஒரு நல் உறவை வெற்றிமணிக்கு தந்த இறைவனுக்கு நன்றியும், இவர்கள் வாழ்வு செழிக்க இறையருள் வேண்டி வாழ்த்தினை தெருவிக்கின்றேன். வாழ்க மணிவிழா நாயகன்,வளர்க சகநாயகன் சி.சக்திவேல்.

**அன்புடன்**
**வெற்றிமணிக் குடும்பம்**
**22.11.2022**






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பாயோடு...

என்று கண்ணகி கூறுவதாக இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், மட்டக்களப்பு மக்களுக்கு இந்த கட்டுப்பாடு இல்லை. பசித்தவர் யாராக இருந்தாலும் யாரையும் எதிர்பார்க்காது உணவளிக்கும் பண்பாடு அங்கு இருந்தது.

“இந்திரர் அமிழ்தம்இயைவ தாயினும் இனிதெனத் தமியர் உண்டலும் இலரே” என்று புறநானூற்று 182 ஆவது பாடலிலே சாவா மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் விருந்தினர்களுக்குக் கொடுத்து உண்டார்கள் என்று கூறப்படுவதையே வள்ளுவரும்

கூஷகூஷவிருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று என்று கூறுகின்றார்.

பல்லவர் காலத்திலே சிவனடியார்களுக்கு உணவளித்து உண்ணும்மரபுஇருந்தது. அதனாலேயே பாம்பு தீண்டி இறந்த மைந்தனை மறைத்து அப்பர் சுவாமிகளுக்கு அப்பூதியடிகள் உணவளித்தார்.

இவ்வாறு விருந்தினரை எப்படி உபசரிக்க வேண்டும் என்று இலக்கியங்களும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றை அறிந்த பண்பிலேயே வாழப் பழகினால், எல்லாரும் பலரை பாயோடு ஒட்ட வைக்க முடியும்.

**உதவிய நூல்கள்:**

ஏலாதி, சாரதா பதிப்பகம், சென்னை,பதி.2018.


விவேகசிந்தாமணி, கற்பகம் புத்தகாலயம்

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு புதிய புற்றுநோய் தடுப்பூசி

உங்கள் எல்லோருக்கும் தெரிந்தது போன்றுதான் இருக்கிறது. கொரோனா காலத்தில் வாழும் உங்களுக்கு இதை விளக்கத் தேவையில்லை, இருந்தும் கூறுகிறேன். இது நமது உடலில் காணப்படும் புற்றுநோய் உயிரணுவின் வடிவமைப்பை நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியுடன் காண்பித்து அனைத்து புற்றுநோய் உயிரணுக்களையும் அழித்துவிடும். என்ன தான் இந்தத் தடுப்பூசியின் செயல்முறை நன்றாக இருந்தாலும், இதில் ஒரு சிறிய பிரச்சனை உள்ளது. இது ஒரு சில புற்றுநோய்களுக்கும் சில சூழ்நிலைகளிலும் மட்டுமே தான் பயன் படுத்த முடியும். அது மட்டுமில்லாமல் இந்தத் தடுப்பூசி அனுமதி பெற்று வெளிவரும் வரை பல ஆண்டுகள் போய்விடும்.

அடுத்ததாக personalised therapy என்று அழைக்கப்படும் சிகிச்சை முறையைப் பார்ப்போம்.



இதில் ஒரு நோயாளியின் புற்றுநோய் உயிரணுக்களைப் பரிசோதனை செய்து, அது வேகமாகப் பிரதி செய்வதற்கான காரணத்தை அறிந்த பின் அதற்கு ஏற்ற சிகிச்சை முறையைத் தேர்வு செய்வதே அதன் நோக்கம் ஆகும். ஆனால் இந்த person alised therapy கூட அனைத்து புற்றுநோய்களையும் குணப்படுத்த முடியாது.

தற்போது அனைத்து புற்றுநோய்களுக்கும் எதிரியாக விளங்கக்கூடியது Antibody-drug conjugate என்று அழைக்கப்படும் ADCs தான் என்று நம்பப்படுகிறது. இதன் செயல்முறை எவ்வாறு என்று பார்ப்போம். இதற்குப் புற்றுநோய் உயிரணுக்களில் போய் இணையும் ஒரு பிறபொருளெதிரி என்று அழைக்கப்படும் antibody ஒன்றில் அந்த உயிரணுவை அழிக்கும் விஷத்தைப் பொருத்தி புற்றுநோயை மட்டுமே தாக்குவதே ஆகும். இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், இதனால் ஆரோக்கியமான உயிரணுக்கள் தாக்கப்படாது என்பது தான். ஆனால் இதில் ஒரு சின்ன பிரச்சனை உள்ளது. இந்த மருந்தை உருவாக்குவது என்பது அவ்வளவு இலகில்லை. தற்போது விஞ்ஞானிகள் இந்த சிகிச்சை முறையில் நம்பிக்கை கொண்டு அவர்களின் ஆராய்ச்சியைத் தொடர்கின்றனர். இதனால் மனித இனத்திற்கு வெகு விரைவில் ஒரு விடிவு காலம் கிடைக்கின்றதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அழையா விருந்தாளி..

மனிசியைப்பாத்து இன்னும் நேரம் இருக்குத்தானே போய் இருப்பமா எண்டு கேப்பம் எண்டு திரும்ப, மனிசி “இவ ஆரெண்டு தெரியுதோ “ எண்ட யாரையோ காட்டிக் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் ஆஆஆ எண்டு இழுக்க மனிசி இன்னார் எண்டு விபரம் சொல்லீட்டு அவவோட கதைச்சுக் கொண்டு டிரளல ஆ நிண்டிச்சுது. ஆலாத்தியும் ஆசீர் வாதமும் முடிஞ்சுது இனிச் சரி எண்டு நிக்க. Decent discipline ஆ நிண்ட ரெண்டு பேர் ஆருக்கோ கையைக் காட்டிக் கூப்பிட ஒரு வரிசையில நிண்ட ஙரநரந இப்ப கிளைவிட்டு மூண்டாகிச்சுது. சரி பரவாயில்லை எண்டு நிக்க திடீரெண்டு ஒருத்தர் traffic police மாதிரி இடது பக்கத்து ஆக்களை நிப்பாட்டீட்டு வலது பக்கத்தால ஆக்களை விட,ஆக்கள் குறூப் குறூப்பா ஏறிச்சினம்.

இவை முந்தி வேலை செய்தவை, இவை இப்ப வேலை செய்யிறவை, அவைக்கு பஸ்ஸ/க்குப் போகோணும் எண்டு ஏறிப்போறவைக்கு ஒரு விளக்கமும் தந்து கொண்டிருந்திச்சினம் பொலிஸ் வேலை பாத்தாக்கள். குறூப் காரர் எல்லாம் கலியாணவீட்டுக்காரர் பிடிச்ச கமராக் காரரில நம்பிக்கை இல்லாமல் தங்கடை கையைடக்க கமராக்களையும் குடுத்து படமும் எடுத்துக் கொண்டு போச்சினம். Traffic police signal மாத்தி திருப்பி இந்தப் பக்கம் விட, மூண்டாப்பிரிஞ்ச எங்கடை queue திடீரெண்டு ஒண்டாக நான் இன்னும் கொஞ்சம் பின்னுக்கு வந்தன். இப்பிடி நிண்டா சரி வராது எண்ட யோசிக்க, திடீரெண்டு “நீங்கள் டிரளல ஆன ஆக்கள் அந்தப்பக்கத்தால வாங்கோ” எண்டு கூப்பிட்ட குரலுக்கு மாட்டன் எண்டாமல் நானும் குறுக்கால போய் முறையாக ஙரநரந இல நிண்டவன் திட்டிறதைக் கவனிக்காமல் வீடியோவுக்கு இளிச்சபடி முகத்தைக் காட்டினன்.

ஒரு மாதிரி வாழ்த்தீட்டு, படம் எடுத்திட்டு போகேக்க மாப்பிளையின்டை தாய் தேப்பன் நாங்கள் குடுத்ததிலும் பாக்க பாரமா ஒரு gift ஐத் தந்து bye சொல்லி கொடுக்கல் வாங்கலை அங்கயே முடிச்சு அனுப்பி வைக்க, ஒரு கறுத்தச் சட்டை போட்ட கமராக்காரன் அவையைக் கூப்பிட்டான். அப்பாமாருக்கு புத்தி சொல்லி கொண்டிருந்த அம்மாமார் ரெண்டு பேரும் கமராக்காரன் கூப்பிட முதல் ஓடிப்போய் அவன் சொன்னதுக்கு எல்லாம் தலை ஆட்டத் தொடங்கிச்சினம். வரேக்க தாங்களாகவே சந்தனப்பொட்டை போட்டிட்டு உள்ள வந்தவ சனங்கள் திருப்பியும் தாங்களாகவே பெட்டீக்க இருந்த பகைவ ஐயும் எடுத்துக்கொண்டு திரும்பிப் போச்சினம்.

**பி.கு: இப்ப எல்லாம் கலியாணத்துக்குப் போட்டு வீட்டை தான் வந்து சாப்பிடிறனான்.**

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இன்னாருக்கு இன்னார் என்று...

முடிந்து Uniக்கு திரும்பிய விகாஷ் தன் ஷாலினியைத் தேடினான். அவள்தான் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்க மண்ணில் புதுவாழ்க்கை தொடங்கி விட்டாளே! அடுத்து சினேகாவை சந்தித்தான். “சினேகா, எங்கே என் ஷாலினி?“ என்று கண்ணீருடன் கேட்டான். ஷாலினிக்கு திருமணமான விஷயத்தை மறைத்து அவளது பெற்றோர் அவளை Uniயிலிருந்து விலத்தி மேல் படிப்புக்காக வேறு நாடு ஒன்றுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று மட்டும் கூறினாள் சினேகா.

விகாஷ்‘க்கு விஷயங்கள் தெளிவாக தெரிய ஆரம்பித்தன. உலக நாடுகளில் கல்வியில் முன்னணி நகரம் London. முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்று Cambridge. அதில் இறுதி ஆண்டு படிக்கும் ஷாலினியை பெற்றோர் பிடுங்கி எடுத்து சென்றார்கள் என்றால் அதற்கு காரணம் தானாக இருக்கலாம் என்று உணர்ந்து விக்கி விக்கி அழத் தொடங்கினான். திகைப்படைந்த சினேகா அவனது கண்ணீரை கைக்குட்டையால் ஒத்திவிட்டாள். அவன் தொடர்ந்து விக்கி விக்கி அழுதபோது ஒரு சிறு குழந்தையை தேற்றும் ஒரு இளம் பெண்ணைப்போல அவனது தோளில் கை போட்டு அவனது நெற்றியில் முத்தமிட்டாள் சினேகா. மன்மதன் தன் பாணத்தை எய் தான். விகாஷ் சினேகாவை கட்டி அணைத்து பதிலுக்கு கன்னத்தில் முத்தமிட்டான்.

தோழியின் பிரிவு தாங்காமல் விசித்திரமான உணர்வுகளினால் பாதிக்கப்பட்டிருந்த விகாஷ்‘ம் சினேகாவும் தாம் கட்டுண்டு விட்டதையும், இருவருக்கும் மற்றவரின் உறவு அவசியமாக தேவைப்பட்டது என்பதையும் உணர்ந்து கொள்ள நேரம் பிடிக்கவில்லை! சினேகாவின் பெற்றோர் யாழ்ப்பாணத்தவர் என்றாலும் மலேசியாவில் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களுக்கு ‘ஜாதி‘ வழமை தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை. Londonஇல் தன் புதல்வி சினேகாவுடன் கூடப்படிக்கும் கெட்டிக்காரப் பையன் விகாஷ் சினேகாவை திருமணம் செய்ய விரும்பும்போது அவர்கள் தடை சொல்வார்களா? பட்டப்படிப்பும் பட்டமளிப்பும் முடிந்த மறுமாதம் சினேகா விகாஷின் மனைவியாகிறாள். இன்னாருக்கு இன்னார் என்று எழுதிவைத்தானே இறைவன் அன்று!







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மலையக மக்களின் 200 வது வருடமும் அறிவு முதலீடும்

மலையக மக்களின் 200வது வருடத்தை முன்னிட்டு மலையக புத்திஜீவிகளால் பல முன்னேற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. அதில் ஒன்றாக அக்டோபர் மாதம் 07,08,09 ஆகிய மூன்று நாட்கள் மகாவலி ரீச் ஓட்டலில் ஆய்வுக் கருத் தரங்கம் ஒன்றை பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ் (இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின்



ஏ.எஸ்.சந்திரபோஸ்



இரா. ரமேஷ்

பேராசிரியர்) மற்றும் கலாநிதி இரா. ரமேஷ் (அரசியல் விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தெரிவுசெய்யப்பட்ட கல்விசார் சமூகம்சார் செயற்பாட்டாளர்கள் 30 பேரை இணைத்து புலமைசார் அறிவுஜீவிகளான பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ்

பாலேந்திரன் பிரதாரிணி
(இலங்கை)

(இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் பேராசிரியர்), கலாநிதி இரா. ரமேஷ் (அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனை பல்கலைக்கழகம்), திரு பி.முத்துலிங்கம் (சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (ISD) நிறைவேற்றுப் பணிப்பாளர்), திரு.கௌத்தமன் (சட்டத்தரணி சிவில் சமூகச் செயற்பாட்டாளர்), என்.வாமதேவன் (தோட்ட வீடமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர்), திரு. பி.ஏ.காதர் (சமூக அரசியல் செயற்பாட்டாளர்), பேராசிரியர் ஆர்.சேனாதிராஜா (கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் துறை), கலாநிதி எஸ்.கருணாகரன் (தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்) , கலாநிதி எஸ். கே. நவரட்னராஜா (பேராதனை பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் துறையின் விரிவுரையாளர்), திருமதி எஸ். வசந்தகுமாரி (கிழக்கு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்), கலாநிதி என். மொராயஸ் (திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் பேராசிரியர்), கலாநிதி எஸ்.பத்மநேசன் (திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் பீடாதிபதி), பேராசிரியர் எஸ். விஜயசந்திரன் (பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புவியியல் துறை), திருமதி. சோபனாதேவி ராஜேந்திரன் (பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் விரிவுரையாளர்) போன்றவர்களால் ஆய்வு முறையியல் சார்ந்த ஆழமான விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு பாரிய செலவினை





மார்ல்போ நிறுவனத்தின் உரிமையாளர் திரு. மணிமுத்து அவர்கள் பொறுப்பேற்றார். அத்துடன் சமூக அபிவிருத்தி நிறுவனம் (ISD)பங்குபற்றுனர்களுக்கான எழுத்து உபகரணங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

மேலும் 200வது வருட பூர்த்தியில் மலையகக் கல்வி நிலையில் முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் அதன் வளர்ச்சி வேகத்தில் பாரிய தடைகளும் சிக்கல்களும் தவிர்க்க முடியாதவையாகவுள்ள இந்த சூழ்நிலையில் ஆய்வுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் பற்றாக்குறையாக உள்ளது. இலங்கையின் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறான செயலமர்வுகளையும் கலந்துரையாடல்களையும் அமைப்பது பாரிய சவாலான விடயமாகும். இந்த ஆய்வு செயலமர்வும் நிதி பற்றாக்குறை காரணமாக சில கால பின்னடைவின் பின்னரே அரங்கேற்றப்பட்டது. மாணவர்களுக்கும் ஆய்வுத் துறைகளில் சாதிக்க விரும்புபவர்களுக்கும் பொருளாதார நிலைமையே பாரிய தடையாக இருக்கின்றது.

அறிவுஜீவிகளை ஊக்குவிக்கும் தேவை இன்றியமையாதச் சூழலில் சமூக ஆர்வலர்களின் பொருளாதார ரீதியிலான முன்வருகையென்பது மிக அவசியமாகின்றது. இவ்வாறான சூழலிலும் மலையக மக்களின் இருநூறாவது வருட பூர்த்தியை முன்னிட்டு தமிழில் ஆய்வு நூலும் புத்திஜீவிகளினால் ஆங்கில மொழியிலும் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல்கள் தொகுக்கப்படயுள்ளது. ஆய்வுத் துறையை மேம்படுத்த வேண்டிய அவசியத்தின் புரிதலுடன் பண்பாடு அரசியல் வாழ்வியல் நிலைமைகளின் தனித்துவம் என்பதற்கப்பால் ஆவணப்படுத்தலும் ஆர்வலர்களை ஆய்வுத்துறையில் பயணிக்க வைத்தலுமே இங்கு முக்கிய தேவையாகும். இம்முயற்சிகள் இருத்தல் சார்ந்தவையாகும்.





# பொன்னியின் செல்வன் நாவலை இதுவரை வாசிக்காதவர்களையும் பொன்னியின் செல்வன் திரைப்படம் இப்போ வாசிக்க வைத்துவிட்டது!

பொன்னியின் செல்வன் என்றவுடன் தமிழுலகத்திற்கு பளிச் சென்று தெரிய வருவது கல்கி சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த கிருஸ்ணமூர்த்தி எழுதிய பொன்னியின் செல்வன் என்ற நாவலாகும்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் கல்கி சஞ்சிகையில் வாரந்தோறும் கிட்டத்தட்ட நான்கு பக்கங்களில் தொடர்கதையாக ஐந்து வருடங்களுக்கு மேலாக வெளிவந்த இந்தக் கதை நாவலாகி தனிநூலாகியது.

இக்கதையை வாசித்த சாதாரண வாசகர்களிலிருந்து படைப்பாளிகள் எனத் தொட்டு திரைப்பட தயாரிப்பாளர் வரை தமக்குள் இக்கதைக் களம் பற்றியும், இக்கதை






மாந்தர் பற்றியும் வேறு வேறு கற்பனைகளை மனதில் உலாவவிட்டிருப்பார்கள்.

சோழமன்னர்களின்பரம்பரைத்தொடர்பான சுந்தரசோழனின் பிள்ளைகளோடு இணைந்த இக்கதை பல்வேறுபட்ட கதாபாத்திரங்களை உள்ளடக்கியும், சோழ மண்டலம் தவிர்த்து பாண்டிய மன்னருடனான சண்டை, இலங்கையில் காலூன்றியமை போன்ற பெரும் வரலாற்றைத் திரைப்படமாக எடுப்பதென்றால் அது சுலபமான செயலல்ல. கதையின் ஒவ்வொரு வரியும் பல்வேறு நிகழ்வுகளை கற்பனையுடன் பிரதிபலித்து நின்றமையை கல்கியில் இத்தொடரை வாசித்திருந்தோர் அறிவர்.

சம்பவங்களால் நிறைந்திருந்த இக்கதையை திரைப்படமாக்க நடிகர் எம்.ஜி.ஆரிலிருந்து (எம்.ஜி.ஆர் திரையிலே தீந்தமிழ்க்காவியம் என அறிவித்தலையும் செய்து இருந்தார்.) கமலகாசன் வரை முயற்சித்தும் இதனுடைய பிரமாண்டம் இவர்களைத் தயங்க வைத்தது. ஒரு முறைக்கு பலமுறை இந்நாவலை முழுமையாக வாசித்தது மட்டுமல்ல,தான் வாசித்த ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள கதை மாந்தர்களையும், சம்பவங்கள் நடக்கும் களங்களையும் முழுமையாக உள்வாங்கி அதுபற்றிய கற்பனை வளத்தை பெருக்கி ஒவ்வொரு அங்குலம் அங்குலமாக குறிப்பெடுத்தால் மட்டுமே இந்நாவலை ஒரு தரமான திரைப்படமாகத் தயாரித்து பார்ப்போரை,சோழ மன்னரின் காலத்து கொண்டு போக முடியுமென்பதை மணிரத்தினம் நிலைநாட்டியுள்ளார்.



ஏலையா
க.முருகதாசன்
(யேர்மனி)

பொன்னியின் செல்வன் கதைக்களம் இலங்கையுடனும் தொடர்புள்ளதால்தானோ இப்படத்தினை தயாரிக்க லைக்கா மொபைல் குழும உரிமையாளர் சுபாஸ்கரன் ஒப்புக் கொண்டமை சில விடயங்களை இவர்தான் இதைச் செய்வார் என்று காலம் தீர்மானித்து விடுகின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் வெற்றிக்கு முழுக் காரணமும் இலங்கையரான சுபாஸ்கரனே என்பதை மறுக்க முடியாது. இயக்குநர்களின் கற்பனைக்கும் சுதந்திரத்திற்கும் தயாரிப்பாளர்கள் கொடுக்கும் சுதந்தரமே,தயாரிப்பாளர்களின் பணத்தை வீணடிக்காத இயக்குநர்களால் மட்டுமே தமது ஆற்றலை வெளிப்படுத்தும் மனத்தடையற்ற நிலை உருவாகும்.பொன்னியின் செல்வன் எடுக்கப் போகிறேன் என்று சொன்ன மணிரத்தினத்திடம் பாகுபலி மாதிரி இருக்குமா என்று தயாரிப்பாளர் கேட்ட போது "இல்லை கல்கி எழுதியது போல இருக்கும்" என்ற மணிரத்தினம் சொன்ன பதிலானது, ஆயிரம் ஆண்டுக்கு முன்புள்ள சோழரின் கதையை சரியாக தான் உள்வாங்கியுள்ளதையும், இப்படத்திற்கான தனது திட்டமிடலில் தான் கொண்டுள்ள உறுதியும் சரியான முறையில் மக்களைப் போய்ச் சேரும் என்ற அபார நம்பிக்கையுமே ஆகும். மணிரத்தினத்திற்கும் சுபாஸ்கரனுக்கும் நடந்த உரையாடலில் "சரி எடுப்போம்" என சுபாஸ்கரன் தனது முடிவை இரண்டு நிமிட இடைவெளிக்குள் சொன்னதானது மணிரத்தினம் ஒரு நவீன சிந்தனையுள்ள இயக்குநர் எனவே பொன்னியின் செல்வனை தமிழ்த் திரைப்பட உலகம் இதுவரை சந்திக்காத படமாக கொண்டு வருவார் என்ற பெரும் நம்பிக்கையுமேயாகும். தயாரிப்பாளராக ஒரு இலங்கைத் தமிழன்தான் இருந்திருக்க வேண்டும் என்று காலச்சூழ்நிலை இலங்கைத் தமிழர்களுக்கு பெருமையுடைத்தே. பொன்னியின் செல்வன் திரைப்படத்திற்கான கதாபாத்திரத் தேர்வு தொடங்கி கதைக்களம் வரை நுணுக்கமான சிந்தனைக்கூடாக செப்பனிடப்பட்டிருக்கின்றது என்பதைப் படம் பார்த்தோர் அறிவர்.



பொன்னியின் செல்வன் நாவலை வாசித்தோர்,தமது நினைவில் உள்ளதை நினைத்து அவை இப்படத்தில் இல்லையே என நினைக்கலாம்.ஆனால் நாவல்களை படமாக்குவதில் உள்ள ஒரு உபாயமாக நிகழ்வுகளை சுருக்கி அதன் மையக் கருத்தும் நிகழ்வுப் பொலிவும் களப் பொலிவும் சிதையாமல் உயிர்த்துடிப்புடன் எடுப்பதுந்தான் ஒரு திரைப்பட முறையாகும்.மிகக் கவனமாக அதில் கவனம் செலுத்தியுள்ளார் இயக்குநர். சரித்திரக் கதைசார்ந்த திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு இரசிகனின் முன்னால் கதை நடந்த இடத்துக்கே அவனை அத் திரைப்படம் கொண்டு செல்லுமானால் அத்திரைப்படம் வெற்றிப்படமே.கிராபிக்ஸ் வரைகலை இப்படத்தில் இடம்பெற்றிருந்த போதும்,இக்கலை தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாதவாறு இயல்புத்தன்மையுடன் காட்சிகளை தோன்ற வைத்தமையும் நுட்பத்துறையை பயன்படுத்திய முறையின் வெற்றியேயாகும்.நடிகர்களின் விம்பங்களைத் தோற்கடித்து கதாபாத்திரங்களை மட்டுமே கண்முன்னே நிறுத்தி மணிரத்தினம் ஒரு எழுச்சிகரமான வெற்றியை தோட்டத்தரணியின் துணையுடனும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.



பொன்னியின் செல்வன் இரண்டாம் பாகத்தை ஆவலுடன் எதிர்நோக்க வைத்துவிட்டது இத்திரைப்படம். அதுமட்டுமல்ல பொன்னியின் செல்வன் நாவலை இதுவரை வாசிக்காதவர்களையும் வாசிக்க வைத்துவிட்டது. ■





தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:-
பண்டாரவன்னியன் புத்தகசாலை
இல., 113 பாடசாலை வீதி,
பண்டாரிகுளம், வவுனியா, இலங்கை
+94772244616

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## விழித்தெழு பெண்ணே - உலகளாவிய தமிழ் பெண் ஆளுமைகளின் விருது - கனடா 2022

# யேர்மனியில் இருந்து இயக்குநர் சிபோ சிவகுமாரன் பெற்றார்




உலகளாவிய தமிழ் பெண்கள், ஆளுமைக்களின் விருது விழா கடந்த மாதம் 15ம் திகதி கனடாவில், இடத்பெற்றது.

மேற்படி விழாவை விழித்தெழு பெண்ணே அமைப்பினர் சிறப்பாக நடத்தினர். 14 நாடுகளுக்கு மேல் இருந்து பல துறைசார்ந்த ஆளுமைப் பெண்கள் விருது பெற்றனர்.

யேர்மனியில் இருந்து நாளைய நாம் தொடர் நாடகம், நாளைய மாற்றம் திரைப்படம் (அண்மையில் ஆரம்ப விழா நடைபெற்றது) ஆகியவற்றின் இயக்குநர் திருமதி சிபோ சிவகுமாரன் பெற்றுக்கொண்டார். அவர்களுக்கும் இவ்விருதினைப் பெற்ற ஏனைய தமிழ் பெண்களுக்கும், விழித்தெழு பெண்ணே அமைப்பினர்களுக்கும், நிறுவனர்: சசிகலா நரேந்திரசிங்கம் அவர்களுக்கும் வெற்றிமணியின் வாழ்த்துகள்.




# 2022: அதிக சம்பளம் வாகும் தமிழ் சினிமா டாப் நடிகர்கள்

### இதில் பாதி உண்மையாக இருந்தாலும் உச்சுக்கொட்ட வைக்குதே இவர்களது ஊதியம்.



01. விஜய் - 118 கோடி
2. அஜித் குமார் - 105 கோடி
3. ரஜினிகாந்த் - 105 கோடி
4. கமல் ஹாசன் - 55 கோடி
5. சூர்யா சிவகுமார் - 28 கோடி
6. சிவகார்த்திகேயன் - 25 கோடி

ரஜினி, விஜய், அஜித் என அதிக சம்பளம் வாங்கும் தமிழ் சினிமா டாப் நடிகர்களின் சம்பள விவரங்கள் இங்கு உள்ளன. இந்த பட்டியல் 2022-ம் ஆண்டு நடிகர்கள் வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ளது.

இதில் பாதி உண்மையாக இருந்தாலும் உச்சுக்கொட்ட வைக்குதே இவர்களது ஊதியம்.

# வாரிசுடன் மோதும் துணிவு





தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களான அஜித்தின் துணிவு மற்றும் விஜய்யின் வாரிசு படங்கள் வரும் பொங்கல் போட்டியை நேரடியாக எதிர்கொள்கின்றன.

ஜில்லா – வீரம் படத்துக்கு பிறகு நேரடி மோதலை இரு நடிகர்களும் தவிர்த்து வந்த நிலையில், அடுத்த ஆண்டு ஆரம்பத்திலேயே பெரிய போட்டிக்கு இருவரும் தயாராகி விட்டனர்.

ஆனால், விஜய்யின் வாரிசு வெளியாவ-தற்கு முன்னதாகவே துணிவு வெளியாகிறது என்கின்றனர். வரும் ஜனவரி 12ஆம்திகதி வியாழக்கிழமை அஜித்தின் துணிவு படம்தியேட்டர்களில் வெளியாகிறது.ஜனவரி 13ஆம் வெள்ளிக் கிழமை விஜய்யின் வாரிசு திரைப்படம் வெளியாக உள்ளது. இசையமைப்பாளர் தமன் இசையமைக்கிறார். அதே வேளை பொங்கலுக்கு நடிகர் விஜய் அஜித்துடன் மட்டுமில்லை தெலுங்கில் பிரபாசுடனும் மோதக் காத்திருக்கிறார். ஜனவரி 12ஆம் திகதி பிரபாஸின் மெகா பட்ஜெட் 3டி படமான ஆதிபுருஷ் வெளியாகிறது.

# நடிப்பிலிருந்து விலகும் அஜித்



அஜித்தின் 61 ஆவது படமான துணிவு படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு பெரும்பாலும் முடிந்துள்ளது. துணிவு திரைப்படம் பொங்கலுக்கு வெளியாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து அஜித் தனது 62 ஆவது படத்தை இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் நடிக்கிறார். அந்த படத்தை முடித்ததும் அஜித் சுமார் 2 ஆண்டுகள் சினிமாவில் இருந்து விலகி இருக்க முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரண்டு வருடத்தில் அவர் உலகம் முழுவதும் தனது இரு சக்கர வாகனத்தில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளாராம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



















விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.